# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் : XVIII | இதழ் : 6 | செப்டம்பர் 2024 | விலை. ரூ.15/– |
| Vol. : XVIII | Issue No : 6 | SEPTEMBER 2024 | Price. Rs.15/ |


## ஓமந்தூராரின் 54வது நினைவு நாளில் “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” புத்தக வெளியீடு




செய்தி உள்ளே.....

## திருச்சியில் கல்வி ஊக்கத்தொகை & உதவித் தொகை வழங்கும் விழா



உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

HJ

# ஹரிணி ஜுவல்லர்ஸ்







## தங்கநகை சேமிப்புத் திட்டத்தில் செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVIII செப்டம்பர் 2024 இதழ் : 6

வெளியீட்டாளர் : V. செல்வராஜூ
ஆசிரியர் : R. இராஜசேகரன்
கௌரவ ஆசிரியர் : R. புகழேந்திரன்
இணை ஆசிரியர்கள் : R. அன்பழகன்
P. ஜனார்த்தனம்
துணை ஆசிரியர்கள் : D. மணிவாசகன்
V. ஜெயக்குமார்
சட்ட ஆலோசகர் : R. பாபு B.A.,B.L.,

**விற்பனைப் பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப் பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்
N. சுந்தரராஜூ
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப் பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப் பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகையா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்

## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- ஓமந்தூரார் 54வது நினைவு நாளில் "தேசியப் பேரொளி ஓமந்தூரார்" புத்தக வெளியீட்டு விழா - 6-13
- திருச்சியில் கல்வி ஊக்கத்தொகை மற்றும் உதவி தொகை வழங்கும் விழா - 14-15
- சங்க செய்திகள் - 16-25
- விவசாயப் பகுதி - 26
- சிறப்பு கட்டுரை - 27-28
- மருத்துவப் பகுதி - 29-30
- ஆன்மீகப் பகுதி - 31
- திருமணத் தகவல்கள் - 33-34


எதிர்கால சமுதாயம் அறிவார்ந்த சமுதாயமாக திகழவேண்டுமானால் வாசிப்பு பழக்கம் குழந்தைப் பருவத்தில் இருந்தே துவங்க வேண்டும். இன்றைய குழந்தைகளே, நாளைய வாசகர்கள். இக்கால சூழலுக்கு ஏற்றபடி புதிய சிந்தனைகளையும் அரசியல் மனப்பான்மையையும் நம் குழந்தைகள் மனதில் விதைக்கும்படியான நல்ல பல செய்திகள் நம் ரெட்டி மலர் இதழில் வெளியாகின்றன. நம் குழந்தைகளின் சிறந்ததொரு ஒரு வழிகாட்டியாக இது செயல்படும். இதற்கு அனைவரும் ஒன்றுகூடி கைகொடுத்து உதவுவோம்.

**அலுவலக முகவரி**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# மருத்துவர்களை பாதுகாக்க வேண்டும்

**தலையங்கம்**

கொல்கத்தாவின் ஆர்.ஜி.கர் மருத்துவக் கல்லூரியில் கடந்த ஆகஸ்டு 9 அன்று இரவு நடந்த கொடூரமான சம்பவம் இந்தியாவில் சுகாதார அமைப்பில் உள்ள ஆழமான குறைபாடுகளை மீண்டும் அம்பலப்படுத்துகிறது. மருத்துவ ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க நிறுவப்பட்ட அரசின் வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகள் பல இருந்தபோதிலும் கொல்கத்தாவில் நடந்த சம்பவத்தில் முதுகலை பயிற்சி பெண் டாக்டர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இந்த மனிதாபிமானமற்ற, மிருகத்தனமான செயல்கள் மன்னிக்க முடியாதவை.

கொல்கத்தா சம்பவத்தில் அம்மாநில காவல்துறை சஞ்சய் ராய் என்பவரை கைது செய்து விசாரித்துவருகிறது. அதேநேரத்தில் கொலையான பெண்ணின் பெற்றோர் மற்றும் சிலர் தொடர்ந்த வழக்கை விசாரித்த கொல்கத்தா உயர்நீதிமன்றம், சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை செய்து மேற்குவங்க அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க மாநில அரசு தவறிவிட்டது என்றும், வன்முறையை ஏன் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை என்றும், படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் அடையாளம் பொதுவெளியில் எப்படிக்கசிந்தது என்றும், மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்குக் கூட சுகாதாரமான சூழல் இல்லையா எனக்கேட்டு கடுமையாக கண்டித்தது. மருத்துவத்துறை மிக முக்கியமான துறை என்பதால் மருத்துவர்களுக்கு தேசிய அளவில் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் அத்துடன் பெண்களுக்கு பாதுகாப்பான பணி சூழலை உருவாக்க தேசிய அளவில் ஆய்வு செய்ய குழு அமைக்கவேண்டும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயிர்காக்கும் மருத்துவர்கள் கடவுளைப் போன்றவர்கள். அவர்களை வணங்கவேண்டிய கைகளால் பாலியல் வன்கொடுமை, படுகொலை, கொலை வெறித்தாக்குதல்களை நடத்துபவர்கள் கண்டிப்பாக மனிதகுலத்தை சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. இச்சம்பவம் மருத்துவர் களிடையே அச்சத்தை அதிகரித்துள்ளது.

முதுநிலை மருத்துவம் பயிலும் மருத்துவர்கள் தொடர்ந்து 36 மணி நேரம் பயிற்சி மாணவராக பணியாற்றவேண்டும். அதுவே கடுமையான மனச் சோர்வையும், உடல் சோர்வையும் அளிக்கக்கூடிய செயலாகும். அவர்களால் ஒரே இடத்தில் அமர்ந்து பணி செய்யமுடியாது. பரந்து விரிந்த அரசு மருத்துவமனை கல்லூரி மருத்துவமனைகளில் பல இடங்களுக்கு சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும். பெண் மருத்துவர்களுக்கு இன்றைய சூழலில் இரவு நேரப்பணிகள் என்பவை பாதுகாப்பற்றவையாகவே உள்ளன.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் தங்களின் உயிரையும் பொருட்படுத்தாமல் எண்ணற்ற டாக்டர்கள் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளித்ததால்தான் லட்சக் கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இருந்தும் மருத்துவ சமுதாயத்தினரை அங்கீகரிக்காத நிலையும், அவர்களுக்கு பணியில் பாதுகாப்பு இல்லாத சூழலும் தொடர்கிறது. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

அத்துடன் மருத்துவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் புதிதாக சட்டம் இயற்றவேண்டும் என கோரி நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இதற்கு முன்னரும் இது போன்ற பாதுகாப்பைக்கோரி பல முறை டாக்டர்கள் போராட்டம் நடத்தி உள்ளனர். டாக்டர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவது, ஜாமீனில் வெளிவர முடியாத குற்றம், அதற்கான அபராதம் மற்றும் தண்டனையை விரைவாக வழங்க வேண்டும் என பல மாநில அரசுகள் சட்ட விதிகளை உருவாக்கி இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் அலட்சியம் காட்டி வருகின்றன. அதுவே டாக்டர்களுக்கு எதிராக வன்முறை அதிகரிக்கக் காரணம்.

கடந்த 1973ல் மும்பை மருத்துவமனையில் பணியாற்றிய செவிலியர் அருணா ஷான்பாக், பாலியல் பலாத்காரத்திற்கு ஆளானதால் கோமா நிலைக்கு சென்று, 40 ஆண்டுகள் அதே நிலையில் இருந்து உயிரை விட்டார். அதுபோன்றே தற் போதைய கொல்கத்தா பாலியல் பலாத்காரமும் நிகழ்ந்துள்ளது. 2012ல் டெல்லியில் ஒரு கும்பலால் ஓடும் பேருந்தில் கொடூரமாக கற்பழித்துக் கொல்லப்பட்ட பெண்ணான நிர்பயா சோக நிகழ்வினை நினைவூட்டுவதாக இச்சம்பவம் அமைந்துள்ளது. நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் மனசாட்சியையும் உலுக்கியதுடன் கற்பழிப்புக் குற் றங்கள் தொடர்பான சட்டங்களை கடுமையாக்க வேண்டும் என்று இவை சுட்டிக்காட்டுகின்றன.

மேற்கு வங்கத்தில் நடந்த டாக்டர் படுகொலையில் தடயம் அழிப்பு, குற்றவாளி மறைப்பு குறித்து மாணவர்கள் போராடி வருகின்றனர். குற்றவாளி களைக்கண்டறிந்து இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் இருக்க கடும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் தனியார் மருத்துவமனைகளில் அடிக்கடி பிரச் சனைகள் ஏற்படுகிறது. எனவே தனியார் மருத்துவமனைகளுக்கும் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும். மருத்துவர்கள், குறிப்பாக பெண் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கக் கூடிய தங்குமிடம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வைத்து நாடு முழுவதும் டாக்டர்கள் போராடி வருகின்றனர்.

மேலும் கொல்கத்தாவை போன்ற சம்பவம் நாட்டில் வேறு எங்கும் நடந்துவிடக்கூடாது என்றும் பயிற்சி மாணவி கொல்லப்பட்ட வழக்கில் வெளிப்படைத் தன்மை வேண்டும், பாலியல் வன்கொடுமை செய்து கொன்றவரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

கடுமையான சட்டங்களை உருவாக்குவது மட்டுமே தீர்வல்ல. அவைகளில் உள்ள ஓட்டைகள் வழியாக குற்றவாளிகள் தப்பிக்கவிடாமல் அனை– வரையும் தண்டிப்பதுதான் தீர்வு. ஆகவே கடுமையான சட்டங்களுடன் உறுதியான நட– வடிக்கைகளையும் மேற்கொண்டு இனியும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க சட்டங்களில் சீர்திருத்தங்கள் அவசியமாகிறது. மருத்துவர்களை பாதுகாப்போம். மருத்துவப்பணிகள் சிறக்கும். நாடும் நலம் பெறும்.

R. இராஜசேகரன் ஆசிரியர் குழு

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in


## நிறுவனத்தலைவர் மடல்.....



**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**க**டந்த மாதம் 25.08.2024 அன்று ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 54வது நினைவு நாள் நிகழ்ச்சி தமிழகம் முழுவதும் உள்ள நமது ரெட்டி சமூக அமைப்புகள், மாவட்ட மற்றும் கிளை சங்க நிர்வாகங்கள் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி மரியாதை செய்திருக்கிறார்கள். பல இடங்களில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தியும், அன்னதானம் வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியிருப்பதும் பாராட்டுக்கும், வரவேற்புக்குமுரியது.

**செ**ன்னையில் ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் சார்பில் அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்கள் எழுதிய “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்னும் நூலை வெளியிட்டு, ஓமந்தூராரின் எளிமை, நேர்மை, தூய்மை, நிர்வாகத்திறன், ஊழலற்ற ஆட்சி குறித்து சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துக் கொண்ட ஓய்வு பெற்ற மூத்த IAS அதிகாரி திரு.R.பூர்ணலிங்கம், திரு.A.கோபண்ணா, திரு.K.S.ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி புகழாரம் சூட்டியது 54வது நினைவு நாள் நிகழ்ச்சிகளில் முத்தாய்ப்பாய் அமைந்திருந்தது. அதுசமயம் 2009ம் ஆண்டு ரெட்டி இளைஞர் பேரவை நடத்திய ஓமந்தூராரின் 110வது பிறந்தநாள் விழாவில் ஓமந்தூராருக்கு தபால்தலை வெளியிடவேண்டும் என்ற கோரிக்கை திரு.A.கோபண்ணா அவர்களிடம் வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டு ஓமந்தூராரின் நினைவு நாளில் 25.08.2010 அன்று அன்னாருக்கு நினைவுத்தபால் தலை வெளியிட பேருதவி செய்ததை ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் பேசும் போது நினைவுக் கூர்ந்து நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்கள் உத்தமரின் புகழ் மேலும் பரவ நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்கள். நிகழ்ச்சியின் சார்பில் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு முழுவுருவ சிலை அமைக்கவும், அவரது வாழ்க்கை வரலாற்றை பாடப்புத்தகத்தில் சேர்க்கவும் வலியுறுத்தி விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு.G.V.மார்கண்டேயன் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கை நிறைவேற நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்பதே அனைவரின் அவா.

**த**மிழக மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு மாநில மொழி கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என மொழி சிறுபான்மை பேரவைத் தலைவர் திரு.சி.எம்.கே.ரெட்டி அவர்கள் தமிழக அரசுக்கு கடிதம் வழங்கியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது, “தமிழக மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு மாநிலத்தின் இருமொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்யுமாறு வலியுறுத்துகிறோம். ஏனெனில், தமிழுடன் தங்கள் தாய்மொழியை தொடர, உச்ச நீதிமன்றம் உத்தரவு அளித்தபோது இருமொழிக் கொள்கைகளைத் தான் நாங்கள் பின்பற்றுவோம் என்று தமிழக அரசு தெரிவித்து அதனை அமல்படுத்த மறுப்பது பெரும் ஏமாற்றத்தைத்தருகிறது. இதனால், தமிழகத்தில் வாழும் மொழி சிறுபான்மை மக்கள் 40 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பயிலும் பள்ளிகளில் தேசிய கல்விக் கொள்கையை மறுப்பது வேதனை அளிக்கிறது. 3 மொழிகளை படிக்க விரும்பும் நமது மாணவர்களின் விருப்பங்களுக்கும், மத்திய அரசு வேலைகளை பெறுவதற்கும் மற்றும் மற்ற மாநிலங்களின் மாணவர்களுடன் போட்டியிடுவதற்கும் இது பாதகமாக இருக்கும்” என அதில் கூறியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட மொழியை கற்க விரும்பும் எந்தவொரு மாணவரையும் அரசியல் காரணத்திற்காக புறக்கணிக்காமல் சிறுபான்மையினரின் கோரிக்கைகளைக் கனிவோடு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ரெட்டி சமூக மக்களின் சார்பாக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

**ஓ**.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் சார்பில் TNPSC, TNUSRB, SSC, UPSC & RRB போன்ற போட்டித்தேர்வுகளுக்கு இலவசப்பயிற்சியை கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மூலம் வழங்கி வருகிறோம். இதில் தற்போது மத்திய அரசு பணிகளுக்காக நடத்தப்படும் SSC தேர்வில் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த மாணவி S.சிவதர்ஷினி மத்திய அரசு பணிக்கு 31.08.2024 அன்று தேர்வாகி உள்ளார் என்ற அறிவிப்பு மகிழ்ச்சியை தருகிறது. இவர் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், செங்காட்டுபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.செல்வராஜ்–திருமதி.ராணி தம்பதியரின் மகளாவார். இவர் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கல்லூரியில் B.Tech. படித்தவர். ஓர் ஆண்டுக்கும் மேலாக நமது அகாடமியில் படித்து வரும் அம்மாணவிக்கு தங்கும் வசதி, உணவு, பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுக்காக உதவித்தொகையை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை வழங்கியது. இதற்கு நிதி உதவி வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் அறக்கட்டளையின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**Dr.V. செல்வராஜ்**

# உத்தமர் ஓமந்தூராரின் 54வது நினைவு நாள்
## மற்றும்
# “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” புத்தக வெளியீடு




உத்தமர் ஓமந்தூரார் அவர்களின் 54வது நினைவு நாள் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும், திருமதி.தேவி மோகன் அவர்கள் எழுதிய “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” நூல் வெளியீட்டு விழாவும் 25.08.2024 அன்று காலை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள ஸ்ரீரேகா மினி ஹாலில் நடைபெற்றது. நிகழ்ச்சியினைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**ஐதராபாத் இணைப்பு வரலாறு** நிகழ்வுகளை முக்கியமாக உள்ளடக்கிய **“தேசியப் பேரொளி ஓமந்தூரார்”** என்ற இந்த வரலாற்று நூலினை இந்திய ஆட்சி பணியில் இருந்து ஓய்வுப்பெற்ற மூத்த IAS அதிகாரி திரு.R.பூர்ணலிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு வெளியிட்டார். நூலின் முதல் பிரதியினை ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை அறங்காவலரும், VKS சுரங்கசேவைகள் நிறுவனத்தின் உரிமையாளருமான திரு.ரமேஷ் ரங்கநாதன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.






நிகழ்ச்சிக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனரும், கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் இயக்குநருமான டாக்டர் V.செல்வராஜு அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவர் திரு.R.கோபண்ணா அவர்களும், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் அவர்களும், அரசியல் செயற்பாட்டாளரும், வழக்கறிஞருமான திரு.K.S.ராதாகிருஷ்ணன் அவர்களும், மூத்த பத்திரிக்கையாளர் நெல்லை திரு.மணிமாறன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். நூல் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து நூல் ஆசிரியர் திருமதி.தேவிமோகன் அவர்கள் நிறைவாக ஏற் புரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர்கள் திரு.P.தாமோதரன், திரு.K.ரங்கராஜன் திரு.R.நந்தக்குமார், திரு.N.செல்வராஜ், திரு.P.ஜெயக்குமார் திரு.R.காமராஜ், டாக்டர்.J.அருண்குமார், திரு.R.ரமேஷ்குமார்,

திரு.N.சுந்தர்ராஜன், ரெட்டி இளைஞர் பேரவை துணைத்தலைவர் திரு.S.சுரேந்திரகுமார், நிர்வாகிகள் திரு.வினோத்குமார், திரு.R.பாபு மற்றும் பேரவை முன்னாள் துணைத் தலைவர் திரு.அனந்தமோகன், செயற்குழு உறுப்பினர் திரு.P.ரமேஷ், திருவள்ளூர் மாவட்ட நிர்வாகிகள் மின்னல் திரு.பிரபு, திரு.ஸ்ரீகாந்த் மற்றும் குவைத் ரெட்டி நலப் பேரவை நிர்வாகி திரு.சேகர் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

முதலாவதாக சிறப்பு விருந்தினர்கள் மற்றும் அறக்கட்டளையின் நிர்வாகிகள் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து அறக்கட்டளையின்




அறங்காவலர் திரு.P.தாமோதரன் அவர்கள் தமது வரவேற்புரையில், “உத்தமர் ஓமந்தூராரின் 54வது நினைவு நாள் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிக்கும், திருமதி.தேவி மோகன் அவர்கள் எழுதிய “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்ற நூல் வெளியீட்டு விழாவிற்கும் வருகைத் தந்துள்ள இந்தியாவின் முதன்மை சேவையான இந்திய நிர்வாகப் பணி–யைச்சேர்ந்த ஓய்வுப்பெற்ற மூத்த IAS அதிகாரி ஐயா திரு.R.பூர்ணலிங்கம் அவர்களையும், எனது நீண்ட கால நண்பரும் அரசியல் செயற்பாட்டாளரும், வழக்கறிஞருமான திரு.K.S.ராதாகிருஷ்ணன் அவர்களையும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவர் திரு.R.கோபண்ணா அவர்களையும், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் அவர்களையும், தமிழக அரசியல் வரலாற்றில் ஐதராபாத் இணைப்பு நிகழ்வை வரலாற்றில் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. ஓமந்தூராரின் பங்களிப்பை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ள “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்ற நூல் ஆசிரியை திருமதி.தேவி மோகன் அவர்களையும், முதல் பிரதியை பெறும் பெருமையைப் பெற்ற ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலரும், VKS சுரங்கசேவைகள் நிறுவனத்தின் உரிமையாளருமான திரு.ரமேஷ் ரங்கநாதன் அவர்களையும், அறக்கட்டளையின் அறங்காவலர்கள், பேரவை நிர்வாகிகள், அகாடமியின் மாணவ, மாணவிகள், சங்க உறுப்பினர்கள், ஓ.பி.ஆரின் மீது அளப்பரிய மதிப்பும், மரியாதையும் கொண்ட அனைவரையும்



விழாக்குழு சார்பில் வருக, வருக என வரவேற்கிறேன்” என்றார்.

அறக்கட்டளையின் நிறுவனரும், கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் இயக்குநருமான டாக்டர் V.செல்வராஜ் அவர்கள் தமது தலைமை உரையில், “உத்தமர் ஓமந்தூராரின் 54வது நினைவு நாள் விழாவில் கலந்துக்கொண்டு நூல் பிரதியினை வெளியிட இருக்கின்ற நேர்மையான அதிகாரியும், சிறந்த நிர்வாக ஆளுமை கொண்டவராக விளங்கியவருமான மூத்த IAS அதிகாரி திரு.R.பூர்ணலிங்கம் அவர்கள் வருகைத் தந்தது உத்தமரின் நினைவு நாள் நிகழ்ச்சிக்கு மணி மகுடம் சூட்டிய செயலாகும். அவர் மத்திய அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராகவும், மத்திய ஜவுளி அமைச்சகத்தின் செயலாளராகவும், மத்திய மின் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராகவும் பணி–யாற்றியவர். தமிழக அரசின் மின்வாரிய தலைவராகவும், உள்துறை, சுகாதாரம், தொழில்துறை, உணவுத் துறை போன்றவற்றில் செயலாளராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். பல்வேறுத் துறைகளில் கொள்கை உருவாக்கத்தையும், புதுமையான யோசனைகளையும் அரசுக்கு வழங்கி நிர்வாக சிக்கல்களைக் களைந்தும், தமிழக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பையும் வழங்கியவர். பல ஆய்வுக்கட்டுரைகளையும், புத்தகங்களையும் எழுதி வெளியிட்ட சிந்தனையாளர். அவர் ஓமந்தூராரின் ஆட்சியில் நடைபெற்ற மிக முக்கியமான வரலாற்றில் மறைக்கப்பட்ட நிகழ்வான ஐதராபாத் இணைப்பு வரலாற்றை நூலாக வெளியிட 100 சதவீதம் தகுதியானவர் திரு.R.பூர்ணலிங்கம் அவர்கள். அவர் “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்ற வரலாற்று நூலை வெளியிட்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்” என்றார்.

ஓய்வுப்பெற்ற மூத்த IAS அதிகாரி திரு.R.பூர்ணலிங்கம் அவர்கள் “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” நூலினை வெளியிட்டு பேசுகையில், “நான் பிறந்த இரு வருடத்தில் ஓமந்தூரார் முதல்வராக பொறுப்பேற்றவர். ‘ஓமந்தூரார் முதல் முதல்வர்’ என்கிற நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரைப்பட நடிகர் திரு.சிவக்குமார் அவர்கள் என் வயது ஒத்தவர்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

என்ற குறளை குறிப்பிட்டு அவர் எழுதிய அணிந்துரையைப் படித்தேன். ஒரு மனிதன்




மனதில் கூட மாசு இல்லாதவனாக வாழ முடியுமா என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடிய வில்லை. ஆனால் அப்படி ஒரு வாழ்க்கையை மனிதரில் புனிதராக வாழ்ந்து காட்டியவர் ஓமந்தூரார் என்பதை எண்ணிப்பார்க்கும்போது பெரும் வியப்பாக இருக்கிறது.

ஐதராபாத் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைப்பதில் பெரும் பங்காற்றியவர் ஓமந்தூரார் தான் என்பதை இந்த நூலாசிரியரின் புத்தகத்தைப் படித்தப் பிறகு தான் நான் இன்று அறிந்து கொண்டேன். இந்திய நிர்வாகப்பணியில் சேருவ–தற்காக நான் படித்தபோது ஓமந்தூரார் பற்றி இவ்வளவு ஆழமான கருத்துகள் தெரிந்திருக்க வில்லை. ஐதராபாத் இணைப்பு வரலாற்றில் முக்கிய இடம் பிடித்த ஓமந்தூராரின் பங்களிப்பை யாராலும் மறைக்கவோ, மறக்கவோ முடியாது. அந்த வகையில் இந்த நூல் மாணவர்களுக்கு ஒரு வரலாற்று ஆவணமாக திகழும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நாடு விடுதலையடைந்த போது முதல் அமைச்சராக பதவி வகித்து வந்த ஓமந்தூரார் முதல் முதலமைச்சர் என்ற பெரு–மையைப் பெற்று அரசியல் வரலாற்றில் சாதனை முத்திரையைப் பதித்துள்ளார். விளம்பர யுக்தியை சிறிதும் விரும்பாத ஓமந்தூரார் பாராட்டு விழாக்களுக்கு தடைப்போட்டார். எளிமை, தூய்மை, நேர்மை என்ற மூன்று மந்திரத்தையும் தம் ஆட்சிக்காலத்திலும், வாழ்க்கையிலும் இறுதி வரை பின்பற்றி வாழ்ந்த ஓமந்தூரார் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு ஒரு முன்னுதாரணமானவர். அவரது தேசியப்பணியும், ஆன்மீக நெறிமுறை களும், கறைப்படாத கரங்களுக்கு சொந்தக்காரர் என்பதை காட்டுகின்றன. காந்தீய வழியில் ஒழுக்கசீலராக விளங்கியவர். இப்படி அவரைக் குறித்து சொல்லிக்கொண்டே போகலாம். இது தவிர ஓமந்தூரார் ஒரு சமூக சீர்திருத்தவாதியாக வும், ஆன்மீகவாதியாகவும் இருந்ததை அவரது வரலாற்றை நன்கு அறிந்தவர்களால் தான் அறிய முடியும். தேவதாசிமுறை ஒழிப்பு, பட்டியலின மக்களுக்கான நலத்திட்டங்கள், ஆலய நுழைவுப் போராட்டம், பூரண மதுவிலக்கு, தீண்டாமைக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி என எண்ணற்ற பல சீர்திருத்த செயல்களுக்கும், சமூக நீதிக்கும் வித்திட்டவர் ஓமந்தூரார் தான் என்பதை அவரது வரலாற்று ஏடுகளில் மறைக்கப்பட்டுள்ள பல செய்திகளை தேடி கண்டுபிடித்து எந்த ஒரு தகவலும் விட்டுவிடாமல் அத்தனையையும் நூல் ஆசிரியர் பதிவிட்டிருப்பது பாராட்டுக்குரியது. நூலாசிரியர் திருமதி.தேவி மோகன் அவர்கள் ஐதராபாத் இணைப்பு விஷயத்தில் ஓமந்தூரார் வகுத்த வியூகங்களை இந்த நூலின் மூலம் நினைவுகூர்ந்துள்ளார். ஓமந்தூரார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை பள்ளிப் பாடங்களில் சேர்க்கவேண்டும். அதனை இன்றைய வளரும் இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கவேண்டும். இது என் கனவு என்று திருமதி.தேவிமோகன் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். அவரது கனவு நிறைவேற வாழ்த்துகிறேன். இதேபோல் ஓ.பி.ஆர் அவர்களுடைய சாதனைகளை தனித்தனி நூலாக வெளியிட வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய இளம் தலைமுறையினர் அவரது வரலாற்றை அறிந்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். வாய்ப்பளித்த அறக்கட்டளை நிர்வாகத்திற்கு நன்றி" என்றார்.

அரசியல் செயற்பாட்டாளரும், வழக்கறிஞருமான திரு.K.S.ராதாகிருஷ்ணன் அவர்களும் கலந்துக்கொண்டு வாழ்த்துரை வழங்கும்போது, "ஓமந்தூராரின் நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ள எனக்கு முழு தகுதி உண்டு. என்னுடைய தந்தை கே.வி.சீனிவாச நாயுடுவிடம் அன்பு பாராட்டியவர் ஓமந்தூரார். அவர் எழுதிய கடிதங்களை என் தந்தையார் பாதுகாத்து வந்தார் என்ற மகிழ்ச்சியான செய்தியை




உங்களோடு பகிர்ந்துக் கொள்வதை பெருமையாக எண்ணுகிறேன். எங்கள் வீட்டில் உத்தமர் ஓமந்தூராரின் காலடிபட்டதை பெருமையாக உணர்கிறேன். விவசாய முதல்வராக ஆட்சி செய்தவர் ஓமந்தூரார். விவசாய சங்கம் அமைத்த நாராயணசாமி நாயுடு, கிருஷ்ணசாமி ரெட்டியார், சுப்பிரமணிய கவுண்டர் போன்றவர்கள் இணைந்து புலம்பாக்கம் முத்துமல்லா ரெட்டியார் தலைமையில் மாநாடு நடத்தி பல கோரிக்கைகளை வென்றெடுத்தவர்கள் ரெட்டியார்கள். மத்தியில் ஆட்சியில் இருந்த ஜவஹர்லால் நேரு தொழில்துறையை நிறுவுவதில் முனைப்புக் காட்டினார். ஆனால் ஓமந்தூரார் சென்னை மாகாணத்தில் விவசாயத்துறைக்கே முக்கியத்துவம் வழங்கினார். காரணம் அவர் ஒரு விவசாயி, விவசாயிகளின் பிரச்சனைகளை அறிந்தவர், தொலைநோக்குப் பார்வை கொண்டவர்.



நேர்மை, எளிமை, தூய்மை என தமிழக அரசியல் வரலாற்றில் உதித்த ஓர் அபூர்வ நட்சத்திரம் ஓமந்தூரார். ஆட்சி அதிகாரத்தை பிடிக்க பலரும் ஆவலாய் பறக்கும் இந்தக் காலக் கட்டத்தில், தேடி வந்த முதல்வர் பதவியை ஏற்க மறுத்தவர் ஓமந்தூரார். ஆன்மீக குரு ரமண மகரிஷி கேட்டுக்கொண்டதின் பேரில் மூன்று மாத காலம் கடந்து முதல்வர் பதவியை ஏற்க சம்மதித்த ஓமந்தூரார் நீண்ட நாள் அவரை ஆட்சி செய்யவிட வில்லை. இரண்டு ஆண்டு மூன்று மாத காலங்கள் மட்டுமே ஆட்சி செய்தவர். அவர் தனது குறுகிய கால ஆட்சியில் வரலாற்று சிறப்புமிக்க சாதனை–களான பூரண மதுவிலக்கை அமல்படுத்தியவர், தேவதாசி முறை ஒழிப்புக்கு சட்டம் இயற்றியவர், விடுதலை கவிஞன் பாரதியின் பாடல்களை நாட்டுடமை ஆக்க நடவடிக்கை எடுத்தவர், தமிழ் கலைக் களஞ்சியம் பத்து தொகுதிகளை வெளியிட நடவடிக்கை எடுத்தவர். பட்டியலின மக்கள் ஆலய நுழைவுப்போராட்டத்தை முன்னின்று நடத்தியதோடு திருமலை–திருப்பதி தேவஸ்தான டிரஸ்டியாக திண்டிவனம் தனித்தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் குலசேகரதாஸ் என்ற ஆதி திராவிடரை அறங்காவலராக நியமித்து உண்மையான சமூகநீதிக்கு அடித்தளம் வகுத்தவர் ஓமந்தூரார். ஆதிதிராவிடர் நலத்துறையை தனியாக உருவாக்கியவர். அவர் பட்டியலின மக்கள் ஆலய பிரவேசம் செய்ய நடவடிக்கை எடுத்தது, தமிழக தீண்டாமை வரலாற்றில் ஒரு திருப்புமுனை. இதன் மூலம் தீண்டாமை கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் ஓமந்தூரார் தான் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. அரசு நிலங்களை பொது மக்களுக்கு வழங்கும் போது பட்டியலின மக்களுக்கு முன்னுரிமையும், முதலுரிமையும் வழங்கப்படவேண்டும் என அரசாணை வெளியிட்டவர் அவர். இன்றைய தலைவர்கள் போல் வாய்சொல் வீரராக இல்லாதவர் ஓமந்தூரார்.

தற்போது சிலர் தெலுங்கை தாய்மொழியாக கொண்ட மக்களை வந்தேரிகள் என பேசி வருகின்றனர். இதனை வன்மையாக இக்கூட்டத்தின் மூலம் கண்டிக்கவேண்டும். தெலுங்கு மொழியை தாய்மொழியாக கொண்ட சமூகத்தில் பிறந்த ஓமந்தூரார் மற்றும் குமாரசாமிராஜா போன்ற முதலமைச்சர்கள் ஆட்சிக்காலத்தில் தான் இந்த தமிழகம் பல வரலாற்று சாதனைகளை நிகழ்த்தியது. வீடூர் அணை திட்டம், விவசாயிகளுக்கு மானியம், இடஒதுக்கீட்டின் மூலம் உண்மையான சமூக நீதிக்கு அடித்தளம் வகுத்தது, பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது, தேவதாசி முறை ஒழிப்பு, ஜமீந்தாரிமுறை ஒழிப்பு, தமிழ் வளர்ச்சிக்கு நட–வடிக்கை, தமிழை ஆட்சி மொழியாக்க நட–வடிக்கைகள் என அனைத்திற்கும் காரணமானவர்கள் தெலுங்கு சமுதாயத்தை சேர்ந்த முதல்வர்களே. நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார், புலம்பாக்கம் முத்துமல்லா ரெட்டியார், திருநெல்வேலி சங்கரரெட்டியார், ஓமந்தூரார் போன்ற தலைவர்களை நீங்கள் அடையாளம் காணவும், கொண்டாடவும் வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தெலுங்கானாவின் தலைநகர் ஐதராபாத் அன்று நிஜாம் பொறுப்பில் இருந்த மிர்உஸ்மான் அலிகான் என்ற முஸ்லீமின் ஆட்சியின் கீழ் இருந்தது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் ஐதராபாத் சமஸ்தானம் இந்திய அரசுக்கு மிகப் பெரிய தலைவலியாக மாறியது. இஸ்லாமிய மதசார்பு அரசை நிறுவும் நோக்கில் நிஜாம் செயல்பட்டார். காஷ்மீர் பிரச்சனையில் நாம் அலட்சியம் காட்டியது போல் ஐதராபாத் விவகாரத்தில் இருந்துவிடக் கூடாது என இந்தியாவின் இரும்பு மனிதர் அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேலிடம் கூறி ஓமந்தூரார் எச்சரித்தார். பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் உருவானதை போல ஐதராபாத் ஒரு தெற்கு பாகிஸ்தானாக உருவாவதை தடுத்தவர் ஓமந்தூரார்.

ரசாக்கர்கள் என அழைக்கப்பட்ட முஸ்லீம் தீவிரவாதிகளின் திட்டத்தை முறியடிப்பதில் ஓமந்தூரார் அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். எட்டு இராணுவ விமானங்களை சென்னையில் இருந்து ஐதராபாத் எல்லைக்கு அனுப்பி வைத்தார். இதற்கு வல்லபாய் பட்டேல் முழு ஆதரவு தெரிவித்தார். ரசாக்கர்களின் ஆக்ரோஷமான செயலையும், எல்லை மீறிய நடவடிக்கைகளையும் அப்போதைய இந்திய பிரதிநிதி கே.எம்.முன்ஷி ஐதராபாத்திற்கு பயணம் செய்ததின் மூலம் ஓமந்தூராரின் எச்சரிக்கை தகவல்களை உறுதி செய்தார். சென்னையில் பெரம்பூர் ரயில்வே தொழில் கூடத்தில் நடராசன் என்பவரின் தொழிற் நுட்பத்திறனை அறிந்து அவரை பயன்படுத்தி நாட்டுத்துப்பாக்கி போன்ற ஆயுதங்களை கோவையில் சுந்தரம் என்பவரது தொழிற் சாலையில் தயாரித்து ஐதராபாத் போரில் ஈடுபடும் வீரர்களுக்கு விநியோகித்தார் ஓமந்தூரார். அதே சமயம் 1948 பிப்ரவரி 21 அன்று நடைபெற்ற சென்னை, மும்பை மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் ரசாக்கர்களின் இயக்கத்திற்கு தடைவிதித்து ஆணையிட்டது மத்திய அரசு. 1948 செப்டம்பர் 13ல் ஐதராபாத் மீது மும்முனைத் தாக்குதல் நடத்தி 1911 ரசாக்கர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த இராணுவத் தாக்குதல் இந்திய அரசியல் வரலாற்றில் **"ஆபரேஷன் போலோ"** என பதிவு செய்யப்பட்டது. ஆனால் விடுதலைக்குப் பின் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் ஓமந்தூராரின் இந்தப் பங்களிப்பு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது




என்பதை நூலாசிரியர் திருமதி.தேவிமோகன் அவர்கள் ஆதாரங்களுடன் ஆணித்தரமாக எடுத்து வைத்துள்ளதைப் பாராட்டுகிறேன். விடுதலைக்கு முன்னும், பின்னும் ஐதராபாத் நிலவரங்களை உன்னிப்பாக கவனித்து நிஜாம் அரசை வழிக்கு கொண்டுவர ஓமந்தூரார் மேற்கொண்ட யுக்திகளும் பல நிகழ்வுகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க ஓமந்தூராரின் புகழை உலகம் முழுவதும் பரவச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நூலாசிரியர் திருமதி.தேவிமோகன் அவர்களுக்கு பாராட்டுகள், வாழ்த்துகள்” என்றார்.

விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு வாழ்த்துரை வழங்கும் போது, “இன்று காலை தான் அண்ணன் செல்வராஜூ அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து, ஓமந்தூரார் அவர்களின் 54வது நினைவு நாளை முன்னிட்டு “தேசியப்பேரொளி ஓமந்தூரார்” என்ற நூல் வெளியிட இருக்கிறோம். இதில் கலந்துக் கொள்ளவேண்டும் என கேட்டுக் கொண்டார். அவரது அழைப்பை தவிர்க்க முடியாமல் அதனை ஏற்று இங்கு வந்திருக்கிறேன். எனக்கு இங்கு வந்த பிறகுதான் தெரிந்தது இது ஒரு அற்புதமான நிகழ்ச்சி என்று. இங்கு வாழ்த்துரை வழங்க வருகைத்தந்துள்ள அண்ணன் கோபண்ணா அவர்களையோ, திருமதி.தேவி மோகன் அவர்களையோ நான் நேரில் பார்த்தது இல்லை. ஆனால் நான் அண்ணன் கோபண்ணா அவர்கள் எழுதிய ‘மாமனிதர் நேரு’ என்ற நூலினை வாங்கி படித்து, ரசித்து அவர் மீது எனக்கு எல்லையற்ற மதிப்பும் மரியாதையும் உருவானது. அவரோடு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. ஜவஹர்லால் நேரு குறித்த அவரது நூலில் அண்ணன் கோபண்ணா அவர்களின் இலக்கிய நயம், வரலாற்று அறிவு, தேசத்தின் மீது அவர் கொண்ட தொலைநோக்கு பார்வை இவை அனைத்தும் என்னை மிகவும் கவர்ந்தது. அதனால் மாமனிதர் நேரு குறித்த நூறு புத்தகங்களை வாங்கி எனக்கு பிரியமானவர்களுக்கு வழங்கி வருகிறேன். அந்த வகையில் இன்று என் அன்பு நண்பர் திரு.K.S.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு அதனை வழங்குகிறேன்.

அதேபோல அண்மைக்காலமாக, உத்தமர் ஓமந்தூரார் குறித்து தமிழகத்தில் பெருமளவில் மேடைகளில் பேசப்பட்டும், தமிழில் சில நூல்களும் வெளிவந்து கொண்டும் இருக்கின்றன. அந்த வகையில் இன்று உங்கள் கரங்களில் தவழும் “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்னும் இந்த நூல் முற்றிலும் மாறுபட்டது. இருட்டடிப்பு செய்யப்பட்ட ஓமந்தூராரின் வரலாற்றை வெளிச் சத்திற்கு கொண்டு வரும் பணியினை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் அறங் காவலரும், நூலாசியருமான திருமதி.தேவி மோகன் அவர்கள் செய்து வருகின்ற பணி அளப்பரியது, பெரிதும் பாராட்டுக்குரியது. சென்னை—செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றிய முதல் முதல்வர் ஓமந்தூரார். அவர் எதையும் வெளிப்படையாக பேசும் துணிச்சல்மிக்கவர். நேர்மைக்கும், எளிமைக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். எங்களைப்போன்று அரசியலில் இருப்பவர்களுக்கு ஓமந்தூரார் இலக்கணமாக இருந்து வாழ்ந்து மறைந்தவர்.

அரசியல் என்பது மக்களுக்கு செய்யும் தொண்டு என குறிப்பிட்டவர் அண்ணல் காந்திஜி. பொது வாழ்க்கைக்கு வருவது—அரசியலில் ஈடுபடுவது சுயநலத்திற்காக அல்ல—சொத்து சேர்ப்பதற்காக அல்ல என சுட்டிக்காட்டியவர் நம் தேசப்பிதா. அவர் வழியில் சேவை செய்தவராக, முதலமைச் சராக ஓமந்தூரார் அவர்கள் வாழ்ந்திருக்கிறார். பொது வாழ்வில் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வழிகாட்டியாக விளங்கியவர். ஒழுக்கம் எளிமைக்கு இலக்கணமாக திகழ்ந்த ஓமந்தூராரின் ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு விஷயங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறார் நூலாசிரியர் திருமதி.தேவிமோகன் அவர்கள். அவரை வாழ்த்தி பாராட்டுகிறேன். அவரது முயற்சியும், அவரது கனவும் நனவாகட்டும். இந்த நல்லத் தருணத்தில் நான் விளாத்திகுளம் தொகுதியில் நடத்தி வரும் ‘மரங்கள் மக்கள் இயக்கம்’ குறித்து சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தை குலத்தொழிலாக கொண்டவர்கள் மத்தியில் இதை சொல்வதில் பெருமையாக கருதுகிறேன். விளாத்திகுளத்தை தமிழகத்தின் பசுமையான தொகுதியாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தொகுதி முழுவதும் 1 கோடி மரக்கன்றுகள் நடவேண்டும் என்ற கனவு திட்டத்தின் கீழ் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப் பட்டு பல்வேறு வகையிலான மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரித்து வருகிறேன். இதன் ஒரு



பகுதியாக வேப்ப மரங்களை விவசாயிகள் தங்களது விவசாய நிலத்தில் நட்டு பராமரிக்க வேண்டும். இதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்துடன் தொகுதியில் வனப்பகுதியின் அளவு அதிகரிக்கலாம் என்ற நிலையில் முதற்கட்டமாக சுமார் ஆயிரம் ஏக்கரில் பொதுமக்கள் தங்களது சொந்த நிலங்களில் வேப்பமரங்களை நட்டு பராமரித்து பொருளாதார மேம்பாடு அடையும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறேன். இந்த வேப்ப மரங்கள் நட்டு பராமரிப்பது, அதன் பயன்கள் பற்றி கிராமங்களில் விவசாய பொதுமக்களிடம் விளக்கி வருகிறேன். மேலும் விவசாயிகளுடன் சேர்ந்து பணியாற்றும் கூட்டுறவு துறை அதிகாரிகள் மூலம் விவசாயிகளிடம் இதனை எடுத்துக்கூறி வருகிறேன். தங்களது சொந்த நிலத்தில் வேப்பமரங்கள் நடுவதற்கு தயாராக உள்ள விவசாயிகளுக்கு உதவுவதே எனது நோக்கம். ஒவ்வொருவரும் தங்களுக்கு என்று 2 மரக்கன்றுகளை வளர்த்து பயன்பெற வேண்டும் என உங்களையும் கேட்டுக்கொள்கிறேன். எதிர்பாராமல் அமைந்த இந்த நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்” என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவர் திரு.R.கோபண்ணா அவர்கள் தமது வாழ்த்துரையில், “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்ற இந்நூல் தமிழக அரசியல் வரலாற்றில் ஓர் அழிக்கப்பட முடியாத ஆவணம். இந்த வரலாற்று ஆவணம் அடுத்து வரும் இளைய தலைமுறையினரும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் திருமதி.தேவி மோகன் அவர்கள் இந்நூலை அழகாக வடிவமைத்துள்ளார். இந்திய வரலாற்றில் உத்தமர் என அழைக்கப்படும் தலைவர்கள் இரண்டு பேர் மட்டுமே. ஒருவர் தேசபிதா மகாத்மா காந்தி, மற்றொருவர் உத்தமர் ஓமந்தூரார். இவர்கள் இருவரும் எளிமை, தூய்மை, நேர்மை என்ற உயர்ந்த பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். குறிப்பாக ஓமந்தூராரின் வாழ்க்கை வரலாறு தமிழக பள்ளிகளில் பாடமாக இடம்பெற வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆனால் அது இன்னும் சாத்தியமாகவில்லை என்பது எனக்கு ஒரு வருத்தத்தை தருகிறது. விரைவில் ஓமந்தூரார் வாழ்க்கை வரலாறு நிச்சயம் பாடப்புத்தகத்தில் இடம்பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நான் இந்த அமைப்பை நடத்தி வரும் நண்பர் செல்வராஜு அவர்களிடம் நீண்ட நாட்களாக நட்பு பாராட்டி வருகிறேன். அவர் 2009ம் ஆண்டு இதே போன்று ஓமந்தூராரின் பிறந்தநாள் நிகழ்ச்சி ஒன்றில் அன்னாருக்கு நினைவுத் தபால் தலை வெளியிட வேண்டும் என கோரிக்கை வைத்தார். நானும் அந்தக் கோரிக்கையை ஏற்று அன்றைய அமைச்சர் பெருமக்கள் எடுத்துச் சொல்லி 2010 ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று ஓமந்தூராரின் நினைவு நாளில் ஓ.பி.ஆர் அவர்களுக்கு நினைவு தபால் தலை வெளியிட செய்தோம். அதேப்போன்று செல்வராஜு அவர்கள் ரெட்டி கஞ்சம் பிரிவை ஓ.பி.சி பட்டியலில் சேர்க்க கோரிக்கை வைத்தார். அதனை நிறைவேற்றித் தரவேண்டும் என்று மத்திய அரசிடம் வைத்த கோரிக்கைக்காக




அவரோடு இணைந்து பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். துரதிஷ்டவசமாக இன்னும் அந்தக் கோரிக்கை நிறைவேறாமல் இருப்பது வேதனையை தருகிறது. பொதுவாக நாம் எல்லாம் மொழி சிறுபான்மையினராகவும் எண்ணிக்கையில் குறைவாகவும் இருக்கிறோம். அரசியலில் அதனால் பெரிய அளவில் பரிமானம் பெறமுடியவில்லை. பெரும்பான்மை சமுதாயத்தவர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் நமக்கு கிடைப்பதில்லை. பல உரிமைகளை இழந்து நிற்கிறோம். இப்போது தமிழக அமைச்சரவையில் இரு அமைச்சர்கள் மிக முக்கியமான பொறுப்புகளில் இடம் பெற்றிருப்பது அவர்களது உழைப்பிற்கு கிடைத்த அங்கீகாரமாகும். இவர்கள் இருவரும் கலைஞர் ஆட்சியிலும், தற்போதைய முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சியிலும் தொடர்வது பெருமைக்குரியதாகும். ஆனால் சாதி அரசியலால் நம் சமூகம் பெரிய அளவில் வெற்றிப் பெறமுடியவில்லை. என்றாலும் நிர்வாகத் திறமையும் தனி மனித முயற்சியினாலும் சில இடங்களில் நாம் வெற்றிப்பெற முடிகிறது. முத்துராமலிங்க தேவர் அவர்கள் பெரும்பான்மை சமுதாயத்தவர் என்பதால் எல்லா அமைச்சர்களும், எல்லா தலைவர்களும் தேவர் ஜெயந்திக்கு சென்று கலந்துக் கொண்டு மரியாதை செலுத்துகிறார்கள். ஆனால் ஓமந்தூராருக்கு அந்தளவில் நடைபெற வில்லை. நாம் சிறுபான்மையினர் என்பதுதான் காரணம். இதுதான் எதார்த்தமான கள நில–வரமாகும். ஆனால் இந்த நிலை ஆந்திராவில் இல்லை. மொழிவாரி மாநிலமாக பிரிந்தபிறகு தமிழகத்தில் நாம் சிறுபான்மையினராக மாறி விட்டோம். ஒருமுறை ஓமந்தூராரிடம் உங்கள் தாய்மொழி என்ன என்று கேட்டபோது அவர் நான் தெலுங்கனாக பிறந்திருந்தாலும் தாய்மொழி தமிழ் தான் என்றார். தமிழகத்தைப் பொறுத்தவரை நாம் நமது அளவை தெரிந்து நடந்து கொள்ளவேண்டும். விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் எந்த அரசியல் கட்சியில் நின்றாலும் திரு.G.V.மார்கண்டேயன் போன்றவர்கள் வெற்றி பெற்று வருவது மகிழ்ச்சியை தருகிறது. அவர் வசிக்கும் இடத்தில் உள்ள மக்கள் தொகை எண்ணிக்கையும், அங்கு உள்ளவர்களின் இன உணர்வுமே இதற்கு காரணம்.

திருமதி.தேவிமோகன் அவர்கள் எழுதிய “தேசியப் பேரொளி ஓமந்தூரார்” என்ற நூல் நவீன

இந்திய வரலாற்றில் சுதேசி மாகாணங்கள் ஒருங்கிணைப்பு விஷயத்தில் ஓமந்தூராரின் முக்கிய பங்கை விளக்குகிறது. சுதந்திரம் பெற்ற போது நடைபெற்ற மன்னர் ஆட்சியில் இருந்த சமஸ்தானங்கள் இணைப்பில் பிரச்சனைக்குரிய பகுதிகளாக விளங்கியவை காஷ்மீர், ஜூனாகட் மற்றும் ஐதராபாத் என்ற பகுதிகள். இதில் ஐதராபாத்தை இந்தியன் யூனியனுடன் இணைப்பதில் ஓமந்தூரார் ஆற்றிய பணி சிறப்புடையதாகும். ஆயினும் வரலாற்றில் அவருடைய பங்கு சரிவர எழுதப்படவில்லை என்பதே உண்மை. திருமதி.தேவிமோகன் அவர்கள் மிக சிறப்பாக ஆராய்ச்சியாளரின் பாங்குடன் படிப்படியாக எவ்வாறு ஐதராபாத் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது என்பதை மிகத் தெளிவாக, ஆணித்தரமாக, சுவையாக எடுத்துக் கூறியுள்ளார். இதுவரை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ வெளிவராத வரலாற்று செய்திகளை இந்நூல் ஆசிரியர் இந்த நூலில் இடம் பெறச் செய்திருப்பது பாராட்டுக்குரியது. ஐதராபாத் நிஜாமிற்கும், பாகிஸ்தான் ஜின்னாவிற்கும், இருந்த உறவு – இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் ஐதராபாத் நிஜாம் இணைப்பை தடுக்க எடுத்த நடவடிக்கைகள், மௌண்ட் பேட்டன், ஜவஹர்லால் நேரு, வி.பி.மேனன், சர்தார் பட்டேல் இவர்களுடன் இணைந்து சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் ஓமந்தூரார் மேற்கொண்ட யுக்திகளை மிகச் சிறப்பாக நூல் ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். “ஆபரேஷன் போலோ” நிகழ்வுக்குப் பிறகு சர்தார் பட்டேல் அவர்கள் தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுகள் உண்மையில் ஓமந்தூராரை சென்றடைய வேண்டும் என்று கூறியதிலிருந்து ஓமந்தூரார் எத்தகைய சிறப்பு வாய்ந்த பங்கினை ஐதராபாத் இணைப்பில் புரிந்துள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது. இது தவிர ஓமந்தூராரின் முழு வாழ்க்கை வரலாற்றை அறிந்துக் கொள்ளும் ஒரு நூலாக இது வெளிவந்திருக்கிறது. நவீன இந்திய வரலாற்றில் ஓமந்தூராரின் பங்கு ஒரு சகாப்தம் எனலாம். இந்நூல் வரலாற்று மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிறவாசகர்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பினை பெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதற்காக இந்த நூலை படைத்த ஆசிரியர் திருமதி.தேவி மோகன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்” என்றார்.

“தேசியப் பேரொளி ஓமந்தூரார் – ஐதராபாத் இணைப்பு வரலாறு” என்ற நூல் ஆசிரியர் திருமதி.தேவி மோகன் அவர்கள் ஏற்புரை வழங்கி பேசும்போது, “எனக்கு புத்தகம் எழுதுகின்ற ஆர்வத்தை தூண்டியவர் திரு.செல்வராஜூ அவர்கள் தான். ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளையில் நான் என்னை இணைத்துக் கொண்டபோது அவர்தான் எனக்கு ஓ.பி.ஆர் குறித்து அறிய பலத் தகவல்களை சொல்லியவர். இதுபோன்ற நேர்மையான, தூய்மையான, அப்பழுக்கற்ற தலைவர்களை இவ்வளவு நாள் நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோமே என்று வருத்தப்பட்டேன். இனி இப்படி யாரும் இருக்கக்




கூடாது என்ற நோக்கத்தில் இளம் தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில் புத்தகங்களை எழுத முடிவெடுத்து திரு.செல்வராஜூ அவர்களிடம் ஆலோசனைப் பெற்றேன். மூத்த பத்திரிக்கையாளர் நெல்லை திரு.மணிமாறன் போன்றவர்கள் எனக்கு இந்தப் புத்தகங்கள் வெளிவர உறுதுணையாக இருந்து வருகிறார்கள். அதற்காக இருவருக்கும் இந்த நேரத்தில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புத்தகத்தை வெளியிட்ட பாரதி புத்தகாலயம் நிர்வாகி திரு.நாகராஜ் அவர்களுக்கும், இந்த விழாவினை சிறப்பாக நடத்த எல்லா வகையிலும் உதவி வருகின்ற ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இந்த புத்தகத்தை இலவசமாக வழங்கிடவேண்டும் என திரு.செல்வராஜூ அவர்களை கேட்டுக் கொள்கிறேன். மேலும் ரெட்டியார் சமுதாயத்தில் பிறந்த ஒவ்வொருவர்




இல்லத்திலும் இந்தப் புத்தகம் இருக்கவேண்டும். அதுமட்டுமின்றி ஓமந்தூரார் பற்றி படித்து அறிந்து கொண்டு அவரைப் பற்றி அனைவரிடத்திலும் பேச வேண்டும். ஓமந்தூரார் வாழ்க்கை வரலாற்றை பாடப்புத்தகத்தில் இடம் பெறும் வகையில் அமைச்சர் ஐயா கே.என்.நேரு அவர்களும், அமைச்சர் ஐயா கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் அவர்களும் முயற்சி எடுத்தால் நிச்சயம் தமிழகப் பள்ளி பாடப்புத்தகத்தில் இடம் பெறச்செய்ய முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. இதுவே எனது லட்சியமாகும். கே.ஆர்.டி கேரியர் அகாடமியில் படிக்கும் மாணவர்கள் வெற்றிப்பெற்று பதவியில் அமரும்போது ஏழைகளின் துயர் துடைக்கும் வகையில் ஓமந்தூராரைப் போன்று நேர்மையாக இருந்து உதவிட வேண்டும். அரசு கொண்டு வரும் நலத்திட்ட உதவிகளை அதிகாரிகள் நேர்மையாக நின்று அதனை அமல்படுத்த

வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு எங்கள் அறக்கட்டளையின் மூலம் பயின்று வரும் மாணவர்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்” என்றார்.

நிகழ்ச்சியில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலரும், ரெட்டி இளைஞர் பேரவையின் பொருளாளருமான திரு.J.அருண்குமார் அவர் நன்றி தெரிவித்து பேசும் போது, “நானிலம் போற்றும் நல்லோர்க்கு நன்றி சொல்வது நமது கடமை. அந்த வகையில் இந்த விழா சிறக்க வருகை தந்து, நூல் வெளியிட்ட இந்திய ஆட்சி பணியில் இருந்து ஓய்வுப் பெற்ற மூத்த IAS அதிகாரி திரு.R.பூர்ணலிங்கம் அவர்களுக்கு நன்றி. உண்மை மட்டுமே சரியானது. அதன் உயர்வே என்றும் வரமாவது, பொய்யின் இன்பம் கீழானது, நேர்மையின் வழியே முறையானது என்ற கொள்கையோடு வாழ்ந்துக் கொண்டிருக்கும் நூலின் முதல் பிரதியை பெற்ற ஓ.பி.ஆர் அறக்கட்டளை அறங்காவலரும், VKS சுரங்க சேவைகள் நிறுவனத்தின் உரிமையாளரு–மான திரு.ரமேஷ் ரங்கநாதன் அவர்களுக்கு



நன்றி. தன்னுடைய வேலையை விட்டுவிட்டு நம் மீது கவனம் வைத்து இந்த நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கி எங்களுக்கு பல நேரங்களில் உதவி செய்து சிறப்பு சேர்த்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவர் ஐயா திரு.R.கோபண்ணா அவர்களுக்கு நன்றி. திறமை என்பது கடவுளால் கொடுக்கப்படும். புகழ் என்பது மனிதர்களால் கொடுக்கப்பட்டது. அகம்பாவம் என்பது நாமாக எடுத்துக் கொண்டது. எனவே எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்று பல கருத்துகளை நம்முன் எடுத்துச் சொன்ன அரசியல் செயற்பாட்டாளரும், வழக்கறிஞருமான திரு.K.S.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி. நினைப்பதை எண்ணங்களாக்கி, எண்ணங்களை உணர்வுகளாக்கி, உணர்வுகளை வரிகளாக்கி,




வரிகளை வலுவாக்கி, வலிமையை அற்புதமாக்கி, அற்புதங்களை தமிழாக்கி, தமிழமுது படைத்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் அவர்களுக்கு நன்றி. என்றும் மாணவர்களுக்கு வழிகாட்டும் சிறந்த ஆசிரியர்களில் ஒருவராக இருப்பவர் ஏற்புரை வழங்கிய நூல் ஆசிரியர் திருமதி.தேவிமோகன் அவர்கள். உங்கள் வழிகாட்டுதலுக்கும், நட்புக்கும், எங்கள் வளர்ச்சியில் நீங்கள் காட்டும் அக்கறைக்கு



அறக்கட்டளையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை மூலம் நடத்தப்படும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் போட்டித்தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள் பயிற்சிகளுக்குக்கென எந்த வித கட்டணமும் இல்லாமல் அறக்கட்டளை சார்பில் முழு நேரப் பணியாக நடத்தி வரும் இன்றைய கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தி சிறப்பு சேர்த்த நிறுவனர் Dr.V.செல்வராஜு அவர்களுக்கும், இந்த செயல்பாடுகளுக்கு உறு துணையாக இருந்து உதவி செய்து வரும் அறங்காவலர்களுக்கும், ஆசிரிய பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் கலந்து கொண்ட சொந்தங்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இதனைத் தொடர்ந்து நடைபெறும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியிலும் கலந்துக்கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்” என்றார்.

நிறைவாக ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அலுவலகத்தில் வைக்கப் பட்டிருந்த ஓ.பி.ஆரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஏழை, எளிய பொது மக்களுக்கு மூன்று வகையான கலவை சாதங்கள் அடங்கிய அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் அறங்காவலர்கள் அனைவரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.



# திருச்சி ரெட்டி நல டிரஸ்ட், திருச்சி மாவட்ட மற்றும் மாநகர ரெட்டி நலச் சங்கம் சார்பில் கல்வி ஊக்கத்தொகை & உதவித் தொகை வழங்கும் விழா




திருச்சி ரெட்டி நல டிரஸ்ட், திருச்சி மாவட்ட மற்றும் மாநகர ரெட்டி நலச்சங்கம் சார்பில் 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உதவித் தொகை வழங்கும் விழா திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் ஹோட்டல் அஜந்தா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் திருச்சி ரெட்டி நலச் சங்க மாவட்ட தலைவர் திரு.A.வேணுகோபால் என்கிற அஜந்தா கண்ணன் அவர்கள் தலைமை வகித்தார். திருச்சி மாநகர ரெட்டி நலச்சங்கத்தலைவர் திரு.S.புண்ணியமூர்த்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். செயலாளர் திரு.R.இளங்கோ அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு K.N.அருண்நேரு M.S. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உதவித்தொகை வழங்கினார்.



பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு K.N.அருண்நேரு M.S. அவர்கள் சிறப்பு விருந்தினராக பேசும் போது, "ஒரு சமுதாயத்தினரின் பெரியவர்கள் செய்யக்கூடிய நல்ல விஷயங்கள் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதாக இருக்க வேண்டும். மேலும், வாழ்க்கையில் கல்வி மட்டுமே ஒருவருக்கு வருமானத்தை ஈட்டக்கூடிய திறமையை பெற்று தரும். அதுமட்டுமின்றி, தொழில் சார்ந்த வாழ்க்கையில் முக்கிய முடிவுகளை எடுக்க கூடிய சக்தி மற்றும் ஊக்குவிப்பை கல்வி தரும் என்பதால் அனைவரும் கல்வி கற்றலை முழுமையாக மேம்படுத்திக்



கொள்ளவேண்டும். மேலும் மாணவ, மாணவிகளுக்கு நான் சொல்ல விரும்புவது யுபிஎஸ்சி தேர்வு எழுதுவது மிகவும் எளிது. தமிழிலும் கூட எழுதலாம். எனவே மாணவர்கள் யுபிஎஸ்சி தேர்வுக்கு முயற்சி செய்து நன்றாகப் படித்து தேர்வு எழுதி நல்ல உயர்ந்த பதவிகளுக்கு வர வேண்டும்" என்றார்.

இதனைத் தொடர்ந்து, திருச்சி மாவட்டத்தில் உள்ள ரெட்டியார் சமுதாயத்தைச்சேர்ந்த உறுப்பினர்களின் குழந்தைகள் 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையை வழங்கப்பட்டது. சுமார் 200 மாணவ, மாணவிகளுக்கு இந்த உதவித் தொகை மற்றும் ஊக்கத்தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

திருச்சி கருமண்டபம் ரெட்டி நலச் சங்க அமைப்புச் செயலாளர் திரு.K.ராமராஜ் அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியினை நடத்தினார். விழாவில்




கலந்து கொண்டு உதவித் தொகையும், ஊக்கத் தொகை பெற்ற மாணவர்களுக்கு தமிழக அரசின் முன்னாள் தலைமை செயலாளர் திரு.இறையன்பு ஐஏஎஸ் அவர்கள் எழுதிய வெற்றி நிச்சயம் என்ற புத்தகத்தை பரிசாக வழங்கினார். சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

விழாவின் இறுதியில் திருச்சி மாநக ரெட்டி நலச் சங்க செயலாளர் மற்றும் சமயபுரம் ரெட்டியார் டிரஸ்ட் தலைவர் திரு.A.ராஜாசிதம்பரம் அவர்கள் நன்றி கூற மதிய விருந்துடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.


இந்நிகழ்வின் தொடர்ச்சியாக மாலை நடைபெற்ற விழாவில் திருச்சி மாவட்ட ரெட்டி நலச் சங்கத் தலைவராகத் திருச்சி பனானா லீஃப் ஹோட்டல் உரிமையாளர் திரு.R.மனோகரன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டார். புதிய தலைவரை மாவட்டத்திலுள்ள அனைத்து கிளை சங்கங்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் பாராட்டி கௌரவித்தனர்.

தொகுப்பு : திரு.பிரசன்னம் ரெட்டியார், திருச்சி




# போற்றுவோம் புனிதரின் பொன்னடியை

உத்தமர் ஓமந்தூராரின் 54வது நினைவு நாளில் அவரைப்பற்றி அரசியல் தலைவர்களும், ஆன்மீக அன்பர்களும் சொன்னதை நினைத்துப்பார்ப்பதே அவருக்குச் செய்யும் அஞ்சலியாக இருக்கும்.



- தன் மனதில் பட்டதை ஒளிவுமறை வின்றிச் சொல்லும் கபடமற்ற மனிதர் உத்தமர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டிகாரு என காந்தியடிகளும்,
- சுருங்கச்சொன்னால் ஓ.பி.ஆர் அவர்கள் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம் என பண்டித நேருவும்,
- என்னை இரும்பு மனிதன் என்கிறார்கள். இரும்பு வளையும் தன்மையுடையது, உருக்கும் போது உறுதியாகும். ஆம் உறுதி குன்றாதவர் தான் ஓமந்தூர் ரெட்டியார் என சர்தார் படேலும்,
- பதவி சிலரால் பெருமை அடைகிறது, சிலர் பதவியால் பெருமை அடைகின்றனர். இதில் முதல் வரிசையில் இடம் கொண்டவர் ஓமந்தூரார் என பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும்,
- பேச்சில் காந்தியம், மூச்சில் தேசியம், வாழ்வில் ஆன்மீகம் இவையே ஓ.பி.ஆரின் உயரிய விரதம் என புதுவை முதல்வர் வெங்கட சுப்பா ரெட்டியாரும்,
- தென்னகத்தின் அரசியல் வானில் அரசியல் தலைவர்களில் கறைபடாத கரங்கள் இருக்குமானால் அவை ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்குச் சொந்தமானதாகவே இருக்கும் என அறிஞர் அண்ணாவும்,
- வள்ளுவர் உயிராகவும், வடலூர் வள்ளலார் உடலாகவும் வடிவெடுத்தால் அந்த புனித உருவம் ஓமந்தூர் ரெட்டியாருடையதாகவே இருக்கும் என திருமுருக கிருபானந்த வாரியாரும்,
- ஓ.பி.ஆர் போன்ற ஒழுக்கசீலர்கள் பல தலை முறைகளுக்கு ஒருமுறை தான் தோன்றுவார்கள். அப்பேர்ப்பட்ட உத்தமர்களைப்பற்றி அடிக்கடி சொல்லி வந்தால் தான் இந்த நாட்டில் மேலும் பல உத்தமர்கள் தோன்றுவார்கள்.

அதனால் தான் நம் காலத்தில் வாழ்ந்த இந்த உத்தமரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளிப்பட செய்யவேண்டும் என அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கமும் புகழ்ந்து போற்றியதை அந்தப்புனிதரின் பொன்னார் திருவடிகளில் பூமாலையாக அணிவித்து நினைவு அஞ்சலி செலுத்துவோமாக! வாழ்க ஓமந்தூரார் புகழ்!!

> "நான் தமிழில்தான் பேசுகிறேன் என்னால் தமிழில் மட்டுமே பேச முடியும். நான் பள்ளிக் கூடத்தில் படித்தது தமிழ்"
>
> – ஓமந்தூரார்

# விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்






ஆகஸ்ட் 30, 2024 வெள்ளிக்கிழமை அன்று விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் 70வது ஆண்டு துவக்க நாள் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. அதுசமயம் விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள ஸ்ரீகல்யாண விநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூஜை நடைபெற்றது.

கவியரசர் அண்ணாமலை ரெட்டியார் மழலையர் மற்றும் ஆங்கில துவக்கப்பள்ளி மாணவச் செல்வங்கள், மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் அனைத்து ஆசிரிய பெருமக்கள், பிற பணியாளர்கள், சங்க பணி–யாளர்கள், சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு இறை வழிபாடு செய்தார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக ராம்கோ சிமெண்ட் நிறுவனத்தின் முன்னாள் துணைத் தலைவர் ஆடிட்டர் திரு.R.சரவணபெருமாள் அவர்கள், அவர்களின் துணைவியார் பேராசிரியை திருமதி.காந்திமதி அவர்கள், விளாத்திகுளம் ரெட்டி மகமை சங்கத்தின் தலைவர் திரு.N.K.P.வரதராஜ பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பூஜையின் முடிவில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் பிரசாதமாக வழங்கப்பட்டது.

**தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட மூத்த சங்கம் விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்**



Certificate of Registration of Societies

ACT XXI OF 1860.

S. No. 22 of 1955

I hereby certify that Reddy Jana Sangam, Vilathikulam has this day been registered under the Societies' Registration Act XXI of 1860.

Given under my hand at Palayamkottai this Thirtieth day of August One thousand nine hundred and Fifty Five

Registrar [illegible] Palayamkottai District.

# அண்ணாநகர் பாடி ரெட்டி நல சங்கத்தின் 11ம் ஆண்டு குடும்ப விழா



சென்னை, அண்ணாநகர் பாடி ரெட்டி நல சங்கத்தின் 11ம் ஆண்டு குடும்ப விழா மற்றும் மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா 18.08.2024 அன்று மாலை மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு G.V.மார்கண்டேயன் அவர்களும், தமிழ்நாடு ரெட்டி நல சங்க வடக்கு மண்டல தலைவர் தொழிலதிபர் தாம்பரம் திரு.இரா.ஜெயராமன் ரெட்டியார் அவர்களும், சென்னை மண்டல செயலாளரும், ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலருமான முடிச்சூர் திரு.P.தாமோதரன் ரெட்டியார் அவர்களும், விளாத்திகுளம் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு.சூர்யா அய்யன்ராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

ஜெ.ஜெ.நகர் பாடி ரெட்டி நல சங்கத் தலைவரும், சதீஷ் ஸ்வீட்ஸ் உரிமையாளருமான திரு.ராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்.பொருளாளர் திரு.S.வேல்முருகன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கச் செயலாளர் திரு.செல்வராஜ் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று மாணவ, மாணவிகளுக்கு நினைவுப் பரிசும், ஊக்கத் தொகையும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியில் வடசென்னை, தென் சென்னை, மத்திய சென்னை மாவட்ட ரெட்டி நல சங்க நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள். நிறைவாக நன்றி உரையுடன், இரவு விருந்து வழங்கி இனிதே நிறைவடைந்தது.

# ஓ.பி.ஆருக்கு வடக்கு மண்டலத் தலைவர் தாம்பரத்தில் நினைவு அஞ்சலி



25.08.2024 அன்று உத்தமர் ஓ.பி.ஆர் அவர்களின் 54வது நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு ரெட்டி நலச் சங்க வடக்கு மண்டலத் தலைவர், தொழிலதிபர், திரு.இரா.ஜெயராமன் ரெட்டியார் அவர்களின் தலைமையில் தாம்பரம் அலுவலகத்தில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில், தென்சென்னை ரெட்டியார் சங்கத் தலைவர் திரு.S.கனிராஜ் ரெட்டியார், செயலாளர் திரு.ராஜாராம் ரெட்டியார், பொருளாளர் திரு.சுரேஷ் ரெட்டியார், நிர்வாகிகள் திரு.S.V.ரமணா ரெட்டியார், திரு.சஞ்சீவி ரெட்டியார், திரு.ரவி ரெட்டியார், திரு.வைகோபெருமாள் ரெட்டியார், திரு.தம்பு ரெட்டியார், திரு.ராஜகோபால் ரெட்டியார், திரு.பாபு ரெட்டியார், திரு.மோகன் ரெட்டியார் ஆகியோர் கலந்துக்கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# காஞ்சி–செங்கை மாவட்ட ரெட்டி நல சங்கம் சார்பில் ஓ.பி.ஆர் அவர்களுக்கு நினைவஞ்சலி



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு முதல்வர்களின் முதல்வர், விவசாய முதல்வர், உத்தமர் என எல்லோராலும் அழைக்கப்பட்ட ஓமந்தூர் பெரியவளவு இராமசாமி ரெட்டியார் அவர்களின் 54வது நினைவு தினத்தை முன்னிட்டு அச்சிறுபாக்கத்தில் அமைந்துள்ள காஞ்சி செங்கை மாவட்ட ரெட்டி நல சங்கத் தலைமை அலுவலகத்தில் கொடியேற்றி அவரது முழுவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

நமது சங்கத்திற்காக உழைத்து நம் நினைவில் நீங்கா இடம் பிடித்த திரு.இராஜாராம் ரெட்டி, மதுராந்தகம் வட்டார தலைவர் திரு.ஜெயராம ரெட்டி, உத்திரமேரூர் வட்டார கௌரவ தலைவர் திரு.பத்மநாப ரெட்டி, சித்தாமூர் வட்டாரத் தலைவர் திரு.பாலமுருகன் ரெட்டி, மாவட்ட இளைஞரணி தலைவர் திரு.நரசிம்ம ரெட்டி, மாவட்ட கௌரவத் தலைவர் ஆகியோர்களின் திருவுருவப்படத்தை திறந்துவைத்து, அவர்களின் நற்செயல்களை போற்றி மரியாதை செய்யப்பட்டது.

மாவட்ட இளைஞரணி தலைவர் திரு.சண்முக ராஜேஸ்வரன் வரவேற்றார். தொடர்ந்து காஞ்சி–செங்கை மாவட்ட ரெட்டி நல சங்கத்தின் செயற் குழு, பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை அலுவலக கட்டுமான வரவு செலவு கணக்குகள் மாவட்ட பொருளாளர் திரு.S.பூபால்ரெட்டி அவர்கள் சமர்ப்பித்தார். மேலும் சங்க எதிர்காலத் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மாவட்டத் தலைவர் திரு.D.விவேகானந்தர் ரெட்டி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். புதிதாக மாவட்ட தலைமையகத்துக்கு கட்டிட பராமரிப்பு குழு உருவாக்கப்பட்டது. செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கௌரவத் தலைவராக சக்தி திரு.கொண்டாரெட்டியார் அவர்கள் ஒரு மனதாக நியமிக்கப்பட்டார். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான இடஒதுக்கீட்டை தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட செயலாளர் திரு.S.தேவதாஸ் ரெட்டியார் அவர்கள் நன்றி கூறினார்.

தகவல் : மின்னல் திரு.மு.ஸ்ரீதர்
செய்தி தொடர்பாளர், காஞ்சி–செங்கை
மாவட்ட ரெட்டி நல சங்கம்

## அன்பான வாசகர்களே!

தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை **ரெட்டி மலர்** அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம். ஆசிரியர்.

## மின்னல் கிராமத்தில் ஓ.பி.ஆர் நினைவு நாளை முன்னிட்டு கண் பரிசோதனை முகாம்






25.08.2024 அன்று ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 54-வது நினைவு நாள் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் அச்சிறுப்பாக்கம் ஒன்றியம் மின்னல் கீழ்மின்னல் கிராமத்தில் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்ட ரெட்டி நல சங்க செய்தி தொடர்பாளர் மின்னல் திரு.மு.ஸ்ரீதர் அவர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். இதனையொட்டி முன்னதாக பாரதப் பிரதமர் தேசிய திட்டத்தின் கீழ் மின்னல் கிராமத்தில் 21.08.2024 புதன்கிழமை அன்று காலை 9 மணிக்கு ஏழை மாணவர்கள் நலச்சங்க அலுவலகத்தில் காஞ்சிபுரம் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்புரை தேர்வு முகாம் நடைபெற்றது.

முகாமில் கண்புரை நோய் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு உலகத்தரச் சான்றிதழ் பெற்ற பம்மல் சங்கரா கண் மருத்துவமனையில் விழிலென்ஸ் பொருத்தும் அறுவை சிகிச்சை, போக்குவரத்து, தங்கும் வசதி, உணவு உட்பட அனைத்தும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் 50க்கும் மேற்பட்ட கண்புரை உள்ளவர்கள் முகாம் அன்றே அறுவைச்சிகிச்சைக்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர். அதன்படி இலவச கண் புரை அறுவை சிகிச்சைக்காக 33 பேர் தேர்வு செய்யப்பட்டு பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப் பட்டனர். தொடர்ந்து அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 26 நபர்களுக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு திரு.செ.கிருஷ்ணமூர்த்தி பெருங்குளத்தூர் அவர்களால் வழங்கப்பட்டது. அறுவை சிகிச்சை முடித்தவுடன் நோயாளிகளுக்கு சிற்றுண்டியை டாக்டர்.ஜாகீர் உசேன் அவர்கள் வழங்கினார். முகாமிற்கு உதவிய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

> உழைப்பில் மட்டும் தான் உண்மையான மகிழ்ச்சி கிடைக்கிறது

## கீரைகளின் பயன்களை சித்தர்கள் பல நூல்களில் எழுதியுள்ளனர்.

- வெப்பம் தணிக்கும், பித்தத்தை தெளியவைக்கும் அகத்திக் கீரை
- ஆண்மை பெருக்கும், நீரிழிவு நீக்கும் முருங்கைக் கீரை
- அஜீரணம் போக்கும், இரத்தத்தைச் சுத்தமாக்கும் புதினாக்கீரை
- உடல் வலிமைக்கும், தாது விருத்திக்கும் அரைகீரை
- இரத்த அணுக்களை அதிகரிக்கும், கேசம் வளரவைக்கும் கருவேப்பிலை
- உடல் தூய்மைக்கு, சோம்பல் போக்க கொத்தமல்லி
- மலச்சிக்கல் நீக்கும், மண்ணீரல் பலமாக்கும் வெந்தயக் கீரை
- வாய்ப்புண் குணமாக்கும், வயிற்றுப்புண் அகற்றும் மணத்தக்காளி
- சரும நோய் போக்கும், தசைகளை பலமாக்கும் பசலைக் கீரை
- குழந்தைகள் வளர்ச்சிக்கும், பித்தம் நீக்கவும் சிறுகீரை
- மூளைக்கு பலம் தரும், நினைவாற்றல் பெருக்கும் வல்லாரை
- சளி நீக்கும், சரும நோய் போக்கும் தூதுவளை
- மேனி அழகையும், கண்ஒளியையும் அதிகரிக்கும் பொன்னாங்கண்ணி
- கை, கால் முடக்கு நீக்கும், மூட்டு வலி போக்கும் முடக்கற்றான்
- பசியைத் தூண்டும், நரம்பைப் பலப்படுத்தும் முளைக்கீரை

என கீரையின் மகத்துவத்தை அடுக்கிக் கொண்டே போகலாம். கீரையை நடமாடும் சித்தர்கள் எனலாம்.

# மதுரை மாவட்ட ரெட்டி நல சங்கத்தில் ஓ.பி.ஆர் நினைவு நாள் அஞ்சலி





மதுரை மாவட்டம் ரெட்டி நல சங்கத்தின் சார்பில் மதுரையில் 25.08.2024 அன்று மாலை 5.00 அளவில் ஓ.பி.ஆர் நினைவு நாள் நிகழ்ச்சி தலைவர் அலுவலகத்தில் தொடங்கி நடைபெற்றது.

அதுசமயம் மாவட்டத்தலைவர் திரு.ராஜா பூர்ணசந்திரன் அவர்கள் ஓ.பி.ஆர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார். மாவட்ட செயலாளர் மோனிகா திரு.S.சதீஷ்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்துக்கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

மாவட்டத் தலைவர் திரு.ராஜாபூர்ணசந்திரன் அவர்கள் பேசும் போது, "சென்னை மாகாணத்தை நேர்மையாய் ஆட்சி செய்த நமது ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு அவருடைய பிறந்த நாளிலும் நினைவு நாளிலும் நாம் மாலையிட்டு மரியாதை செய்து வருகிறோம். ஆனால் அவருக்கு இன்று வரை சென்னையில் ஒரு சிலை இல்லை. ஏன் இந்த அவலம்? ஆனால் அவர்களுக்கு இதுவரை பல ஆட்சிகள் மாறியும் சென்னை மாநகரில் ஒரு சிலையில்லை.

சென்னையில் ஒரு இடத்தில் ஒரு அருமையான ஓமந்தூரார் சிலையை நிறுவ வேண்டுமென்பதே எனது ஆசையும், வேண்டுகோளுமாகும். நாம் ஒற்றுமை இருந்தால் இந்த எண்ணத்தை செயல்படுத்தலாம், சாதிக்கலாம்.

இருட்டு இருட்டு என்று புலம்பி கொண்டிருப்பதை விட ஒரு சிறிய அகல் விளக்கை ஏற்றலாம். அந்த வெளிச்சம் அந்த இருட்டை முற்றிலுமாக விலக்கும். வாழ்க ஓமந்தூரார் புகழ். அவருடைய நினைவை போற்றும் வண்ணம் சென்னையில் விரைவில் சிலை அமைக்க ஒன்றுபடுவோம். மாலை மரியாதை செய்வோம். நம்முடைய சமுதாயத் தலைவரை போற்றி புகழ்ந்து வரலாற்றில் வாழ வைப்போம்" என்றார்.

நிறைவாக நிர்வாகிகளின் அஞ்சலி நிகழ்ச்சியை தொடர்ந்து மதுரை மாவட்ட செயலாளர் மோனிகா திரு.S.சதீஷ்குமார் நன்றி தெரிவித்தார்.

# கூடுவாஞ்சேரி ரெட்டி நல சங்க மாதாந்திர கூட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், கூடுவாஞ்சேரி ரெட்டி நலச்சங்கத்தின் ஆகஸ்டு மாதத்தின் மாதாந்திர கூட்டம் 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை சங்க அலுவலகத்தில் தலைவர் திரு.D.விஜயக்குமார் ரெட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் வரவிருந்த 25.08.2024 அன்று உத்தமர் ஓ.பி.ஆர். அவர்களின் 54வது நினைவு நாளை சிறப்பாக கொண்டாடுவது எனவும், மாவட்ட சங்கத்தின் சார்பாக நடைபெற உள்ள ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் திருவுருவ சிலைக்கு அஞ்சலி செலுத்திய பிறகு மாவட்ட பொதுக் குழுக்கூட்டத்தில் கூடுவாஞ்சேரி ரெட்டி நலச்சங்கத்தின் சார்பில் அனைவரும் கலந்துக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

வரும் 2025-26ம் கல்வி ஆண்டில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சார்ந்த நம் சொந்தங்களின் பிள்ளைகளின் படிப்பு செலவினை உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு ஏற்பது என தீர்மானிக்கப்பட்டது. கூடுவாஞ்சேரி ரெட்டி நலச்சங்கத்தின் துணைத்தலைவரும், மாவட்ட சங்க செயற்குழு உறுப்பினருமான திரு.எஸ்.ராஜாமணி ரெட்டி அவர்களை நந்திவரம் கூடுவாஞ்சேரி பன்னாட்டு லயன்ஸ் சங்கத்தின் கோவில் நகர லயன்ஸ் சங்கத்திற்கு தலைவராக தேர்வு செய்யப்பட்டமைக்கு அன்னாருக்கு ரெட்டி நலச்சங்கத்தின் சார்பாக வாழ்த்து தெரிவித்து சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

கூட்ட முடிவில் இணைச் செயலாளர் திரு.V.தேவக்குமார் ரெட்டி நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# திண்டிவனத்தில் ஓ.பி.ஆர் 54வது நினைவு தினம்





மறைந்த முன்னாள் முதல் முதலமைச்சர் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியாரின் 54வது நினைவு தினம் கடந்த 25.08.2025 அன்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி திண்டிவனம் அருகே ஓமந்தூரில் உள்ள பி.ராமசாமி ரெட்டியார் மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நினைவு தினத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட ரெட்டி நலசங்கம் சார்பில் ஓ.பி.ஆருக்கு நினைவஞ்சலி



25.08.1970ல் மறைந்த ஓமந்தூர் பெரியவளவு இராமசாமி ரெட்டியாரின் 54வது நினைவு தினம் தமிழகம் முழுவதும் உள்ள ரெட்டி சொந்தங்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி திண்டிவனத்தில் ஆர்யாஸ் ஹோட்டல் கார்டன் உள் அரங்கில் தமிழ்நாடு ரெட்டி நல சங்கத்தின் மூத்த நிர்வாகியும், விழுப்புரம் வடக்கு மாவட்ட தலைவரும், தொழிலதிபருமான திரு.M.இராமகிருஷ்ண ரெட்டி தலைமையில் ஓ.பி.ஆர் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தபட்டது.

அதுசமயம் நிகழ்ச்சியில் டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் வழக்கறிஞர் திரு.G.கிருபாகரன் ரெட்டி, பிரம்மதேசம் திரு.சிதம்பரநாதன், முப்புளி திரு.சந்திரசேகர், கொள்ளார் திரு.புண்ணியமூர்த்தி, ஆசிரியர் திரு.கபீர்தாஸ், கூட்டேரிபட்டு திரு.புருஷோத்தமன், தமிழன் செல் உரிமையாளர் திரு.தீனதயாளன், N.B.R திரு.பாபு, சாரம் திருமதி.புஷ்பா, கொல்லியங்குணம் திருமதி.தாட்சாயிணி, திரு.பிரகாஷ், திரு.முத்துகிருஷ்ணன், திரு.ஜெயச்சந்திரன், திரு.சஞ்சீவி, திரு.ஜெயபிரகாஷ், தேசபந்தலு திரு.தட்சணாமூர்த்தி, வழக்கறிஞர் திரு.மேதாவி, திரு.பாபு, திரு.புருஷோத்தமன், திரு.வெங்கட்ராயலு, திரு.தனசேகரன், திரு.சிவக்குமார், திரு.சதீஷ், திரு.ஆறுமுகம், திரு.பாலகிருஷ்ணன் உட்பட பலர் கலந்துக் கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார்.

ஆர்யாஸ் கார்டன் ஓட்டலில் இருந்து ரெட்டி சொந்தங்கள் வாகனங்களின் மூலம் திண்டிவனம் மேம்பாலம் வழியாக பேரணியாக ஓமந்தூர் மணிமண்டபம் சென்று உத்தமர் ஓபிஆர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

தலைவர் திரு.M.இராமகிருஷ்ண ரெட்டி அவர்கள் தமது தலைமை உரையில் ஓபிஆரின் சிறப்புகள் குறித்தும் ரெட்டி இன ஒற்றுமை குறித்தும் வருங்காலத்தில் நம் இனத்திற்கு ஆற்ற வேண்டிய சேவைகள் குறித்தும் எடுத்துரைத்தார். தொடர்ந்து பாஞ்சாலம் கிராமத்தில் அமையப் பெற்றுள்ள குளூனி காப்பகத்தில் ஆர்யாஸ் அதிபர் அறுசுவை உணவு வழங்கினார். காப்பகத்தில் உள்ளோர் ரெட்டி இன மக்களின் மேம்பாட்டிற்காக பிரார்த்தனை செய்தனர்.

# அகில இந்திய தெலுங்கு சம்மேளனம் சார்பில் ஓ.பி.ஆர் நினைவு நாள் நிகழ்ச்சி




முதல்வர்களின் முதல்வர், மாண்புமிகு ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்களுடைய நினைவு நாள் 25.08.2024 ஞாயிற்றுகிழமை அன்று காலை 11 மணிக்கு, கீழ்பாக்கத்தில் அமைந்துள்ள, ஆல் இந்தியா தெலுகு ஃபெடரேஷனின் அலுவலகத்தில், தலைவர் பேராசிரியர் சி.எம்.கே ரெட்டி அவர்கள் தலைமையில், காவடிச்சிந்து ஓமந்தூரார் ரெட்டி நலச்சங்கத்தின் தலைவர் திரு.பி.நாகேந்திரன் ரெட்டி, போக நாடு சங்கத்தின் தலைவர் திரு.ரவிசந்திரன் ரெட்டி, திரு.ஆனந்து ரெட்டி, AITF பொது செயலாளர் நாயக்கர் திரு.நந்தகோபால் நாயுடு, அரக்கோணம் திரு.மனோகர் நாயுடு, திரு.நாகபூசனம், நாயுடு சங்கத்தலைவர் திரு.கங்கன்னா மற்றும் உறுப்பினர்கள் பலரும் கலந்துக் கொண்டு அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

தலைவர் பேராசிரியர் சி.எம்.கே ரெட்டி அவர்கள் தலைமையேற்று பேசும்போது, “மன்னர்களும், செல்வந்தர்களும் கோயில்களுக்கு அளவற்ற நிலங்களையும், எண்ணற்ற சொத்துக்களையும் வழங்கிவிட்டு சென்றுள்ளார்கள். ஆனால் கோயில் சொத்துகள் கபளீகரம் செய்யப்படுவதாக குற்றச் சாட்டு எழுந்ததை தடுக்க ஓமந்தூரார் இந்து சமய அறநிலையச் சட்டத்தை கொண்டு வந்தார். ஒருமுறை திருப்பதி ஓலைச்சுவடி நிலையத்தை பார்வையிட்ட ஓமந்தூரார் அங்கு கூடியிருந்தவர்கள் ஒரு சொற்பொழிவு நடத்த வேண்டும் என விரும்பி கேட்டுக் கொண்டனர். அந்த வேண்டுகோளை ஏற்று தமிழில் பேச்சைத் துவக்க கூடியிருந்தவர்கள் தெலுங்கில் பேசுங்கள் என கூச்சல் போட்டனர். நான் தமிழன், என் தாய்மொழி தமிழ், நான் தமிழன் என்பதையும், என் தாய் மொழி தமிழ் என்பதையும் தெளிவாக சொல்ல விரும்புகிறேன் என திட்டவட்டமாக அறிவித்த ஓமந்தூரார் ஏதோ ஒரு சில தெலுங்கு சொற்கள் எனக்கு தெரியும் என்பதற்காக என்னை தெலுங்கர் என சொல்லக் கூடாது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் எல்லாம் ஆங்கிலேயர்களா என ஓமந்தூரார் எதிர் கேள்வி எழுப்பினார். அப்படி தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட தெலுங்கர்கள் தமிழகத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பாடுபட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவராக ஓமந்தூரார் இருந்தது நமக்கெல்லாம் பெருமையைத் தருகிறது” என்றார்.

நிறைவாக காவடிச்சிந்து ஓமந்தூரார் ரெட்டி நலச்சங்கத்தின் தலைவர் திரு.பி.நாகேந்திரன் ரெட்டி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

# அருப்புக்கோட்டை ரெட்டி நலச் சங்க செயற்குழுக் கூட்டம்



அருப்புக்கோட்டை ரெட்டியார் நல சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் 31.08.2024 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் திரு.K.P.ராமசந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். சங்கச் செயலாளர் திரு.லிங்காரெட்டி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி சங்க நடவடிக்கைகளை குறித்து அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு.S.சிவக்குமார் அவர்கள் மாதாந்திர வரவு, செலவு கணக்கை தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார். நிகழ்ச்சியில் நிர்வாகிகள் திரு.நாகேந்திரன், திரு.R.D.ராஜேந்திரன், திரு.ராஜா, திரு.K.நாராயணன், மல்லம்பட்டி திரு.ராமசந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சங்கத் தலைவர் திரு.K.P.ராமசந்திரன் அவர்கள் பேசும் போது சங்கத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்தும், வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். வருகின்ற 29.09.2024 காலை 10.00 மணிக்கு சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் அருப்புக்கோட்டை K.K.S.S.N. ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிறைவாக நன்றியுரைவுடன் கூட்டம் நிறைவடைந்தது.

# இந்து தமிழ் திசை நாளிதழ் சார்பில் 'மருத்துவ நட்சத்திர விருது' பெற்ற நம் மருத்துவர்கள்







கள்ளக்குறிச்சி மாவட்ட ரெட்டி நல சங்கத்தை சேர்ந்த சேர்ந்த மருத்துவர் Dr.சுரேஷ்ராஜ் அவர்கள் சமூக அர்ப்பணிப்போடு சிறந்த மருத்துவ சேவை ஆற்றியமைக்கு, இந்து தமிழ் திசை நாளிதழ் 'மருத்துவ நட்சத்திரம்' விருது வழங்கி பாராட்டி யிருக்கிறது.

விருது பெற்ற Dr.சுரேஷ்ராஜ் அவர்களை ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாமக்கல் நகர ரெட்டி நல சங்கத்தை சேர்ந்த Dr.இன்பசேகரன் மற்றும் Dr.உமா மகேஸ்வரி தம்பதியரின் மகன் Dr.I.சக்திவேல் அவர்களுக்கு இந்து தமிழ் திசை நாளிதழ் 'மருத்துவ நட்சத்திரம்' விருது வழங்கி பாராட்டியிருக்கிறது.

விருது பெற்ற Dr.I.சக்திவேல் அவர்களை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




சமூக அர்ப்பணிப்போடு சிறந்த மருத்துவ சேவை ஆற்றியமைக்கு இந்து தமிழ் திசை நாளிதழினால் 'மருத்துவ நட்சத்திரம்' விருதுப்பெற்ற Dr.திருமதி.R.விஜயராகினி அவர்களுக்கு பாராட்டுகள். Dr.திருமதி.R.விஜயராகினி அவர்கள் நமது ரெட்டி மலர் ஆசிரியர் விழுப்புரம் திரு.R.ராஜசேகரன் அவர் களின் மகளும், Dr.திரு.G.சந்திரசேகரன் அவர்களின் மனைவியும் ஆவார்.

தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு மா.சுப்பிரமணியன் அவர்களின் கரங்களால் வழங்கப்பட்ட மருத்துவ நட்சத்திர விருதினை பெற்ற மேற்காணும் மருத்துவர்கள் Dr.சுரேஷ்ராஜ், Dr.சக்திவேல், Dr.R.விஜயராகினி ஆகிய மூவருக்கும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பில் பாராட்டுகளும், வாழ்த்துகளும் தெரிவிக்கப்படுகிறது.

## சிந்தனைகளைக் குவியுங்கள்

உங்களுடைய சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்பட்டதாக இருக்கட்டும். சூரிய ஒளியின் வெப்பம் கூட ஒரு ஆடியினால் குவிக்கப்பட்டால் தான் எரிக்கும் ஆற்றல் பெறும். அதனால் ஒரு வேலையைச் செய்யும் போது உங்களின் சிந்தனை முழுவதும் ஒருமுகப்படுத்தி அதிலேயே குவியட்டும். அப்போது தான் முழுமையான வெற்றி கிட்டும்.

## விளாத்திகுளம் ஸ்ரீ அம்பாள் வித்யாலயா (CBSE) பள்ளி 11–ம் ஆண்டு விழா




விளாத்திகுளம் ஸ்ரீ அம்பாள் வித்யாலயா (CBSE) பள்ளி 11–ம் ஆண்டு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஸ்ரீ அம்பாள் வித்யாலயா பள்ளி சேர்மன் திரு.G.V.மார்கண்டேயன் அவர்கள் கலந்து கொண்டு கடந்த கல்வியாண்டில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த பள்ளி மாணவ, மாணவி களுக்கு பரிசுகள் வழங்கி உரையாற்றினார்கள். நிகழ்வில் அக்ளுட் சிறப்பு பள்ளி நிறுவனர் திரு.தானேஷ் கனகராஜ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீ அம்பாள் வித்யாலயா டிரஸ்ட் சேர்மன் திரு.வீமராஜ் அவர்கள் தலைமை வகித்தார். பள்ளி செயலாளர் திரு.சுப்பா ரெட்டியார் அவர்கள் முன்னிலை வகித்தார். மேலும் நிகழ்வில் பள்ளி நிர்வாக அதிகாரி திரு.ராகவன் வழக்கறிஞர் திருமதி.அனிட்டா மார்கண்டேயன், பள்ளி முதல்வர் திருமதி.அமராவதி, விளாத்திகுளம் பேரூ ராட்சி மன்ற தலைவர் திரு.சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் திரு.வேலுச்சாமி, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் திரு.ராமசுப்பு, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் திரு.அன்புராஜன், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் திரு.செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் திரு.மும்மூர்த்தி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் திரு.இம்மானுவேல், தூத்துக்குடி வடக்குமாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் திரு.மகேந்திரன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் திரு.தபசி, விளாத்திகுளம் பேரூ ராட்சி முன்னாள் வார்டு உறுப்பினர்கள் திரு.ஸ் டாலின் கென்னடி, திரு.புஷ்பராஜ், சூரங்குடி கூட்டுறவு சங்க செயலாளர் திரு.ராமச்சந்திரன், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் திரு.ஸ்ரீதர் உட்பட ஆசிரிய, ஆசிரியைகள், பிற பணியாளர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## உயிர்களிடத்து அன்பு காட்டுவோம்

உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்றார் அமரகவி பாரதியார். உயிர்கள் அனைத்தும் இறைவனின் படைப்புக்கள். அவை வெவ்வேறு வகையினவாயிருக்கலாம். ஆனால் அவை அத்தனையும் இறைவனது வடிவங்கள் என்றே நாம் கொள்ள வேண்டும். உயிர்கள் இன்பமும் துன்பமும் எய்துகின்றன. சிலர் உயிர்களை வேதனைப்படுத்துகின்றனர். அன்பு செலுத்துவதற்குப் பதிலாகத் துன்பம் செய்கின்றனர். அதன் மூலம் தாம் இன்பம் காண்கின்றனர். இந்நிலை முற்றாக ஒழிய வேண்டும்.

நம்மை யாராவது அடித்தால் நாம் வேதனைப்படுகிறோம். பிற உயிர்களுக்கு நாம் துன்பம் செய்யும் போது அவைகளும் வேதனைப்படுகின்றன. அதனை நாம் உணர மறந்து விடுகிறோம். சில சிறுவர்கள் வண்ணத்துப்பூச்சி, பொன்வண்டு போன்றவற்றைப் பிடித்து நூலில் கட்டிப்பறக்கவிட்டு மகிழ்கிறார்கள். கிளியைப் பிடித்து அதன் இறகுகளை வெட்டி விடுகிறார்கள். மைனா, கிளி போன்றவற்றைப் பிடித்துக் கூடுகளில் அடைத்து விடுகிறார்கள். அவை தங்கள் இனத்தைப் பிரிந்து, சுதந்திரத்தை இழந்து தங்கள் துன்பத்தை வெளிப்படுத்த முடியாமல் கூடுகளில் கிடந்து தவிக்கின்றன.

ஒரு புறாவுக்காகத் தன் தசையினையே கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியையும், மானுக்காகப் பிணை நின்ற நபி பெருமானையும், ஆட்டுக்குட்டியின் துயர் போக்கிய புத்தர் பெருமானின் கருணையினையும் பற்றிய கதைகளை நாம் படித்திருக்கிறோம். ஆனால் அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டாமா? உயிர்களிடத்துக் கருணைகாட்ட, அன்பு செலுத்த முன்வருவோம்.

எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உணர்வுடன் நாம் செயல்பட வேண்டும். பிற உயிர்களை நம் உயிர் போல் மதித்து வாழ்ந்திடப்பழகுதல் வேண்டும். அதுவே மிகச்சிறந்த வாழ்வு நெறியாகும்.

## கோவில்பட்டி ரெட்டி நலச் சங்கத்தில் ஓ.பி.ஆர் நினைவு நாள் நிகழ்ச்சி





தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ரெட்டி நலச் சங்கத்தின் சார்பில் ஓ.பி.ஆர் அவர்களின் 54வது நினைவு நாள் நிகழ்ச்சி 25.08.2024 அன்று நடைபெற்றது. கோவில்பட்டி ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.பாபுராஜ், செயலாளர் திரு.கனகராஜ், செயற்குழு உறுப்பினர் திரு.சந்திரா ரெட்டி ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டு அன்னாருக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

அதுசமயம் தலைவர் திரு.பாபுராஜ் அவர்கள் பேசும் போது, “2013ம் ஆண்டு ஓமந்தூரில் ஓமந்தூராருக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டது. சென்னையில் உள்ள அரசினர் தோட்டத்திற்கு ஓமந்தூரார் வளாகம் என பெயர் சூட்டப்பட்டது. அந்த வளாகத்தில் தற்போது பல்நோக்கு உயர்தர அரசு மருத்துவமனை ஓமந்தூரார் பெயரிலேயே செயல்பட்டு வருகிறது. 2021ல் அன்னாருக்கு சட்டப்பேரவையில் ஓமந்தூரார் திருவுருவப்படம் அமைக்கப்பட்டது. அதேபோல் நாம் ஒற்றுமையுடன் இணைந்து அன்னாருக்கு சென்னையில் உள்ள ஏதேனும் ஒரு பிரதான இடத்தில் திருவுருவச் சிலை அமைக்கவும், பள்ளிப் பாடப்புத்தகத்தில் அவரது வாழ்க்கை வரலாற்றை சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைப்போம்” என்றார்.

## மாநில அளவில் கரும்பு விவசாயத்தில் அதிக மகசூல் பெற்ற திரு.மூர்த்தி ரெட்டியார்




கரும்பு விவசாயத்தில் தமிழகத்திலேயே மிக அதிகமான மகசூல் உற்பத்தி செய்தவர் என்பதற்காக தமிழக அரசின் முதல் பரிசை திரு.மூர்த்தி ரெட்டியார் அவர்கள் பெற்றுள்ளார். அவருக்கு ரெட்டி மலர் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். திரு.மூர்த்தி ரெட்டியார் அவர்கள் விழுப்புரம் மாவட்டம் தென்னவராயன்பட்டி கிராமத்தில் விவசாயம் செய்யும் புதுவையைச் சேர்ந்த ரெட்டியார்.


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

**ரெட்டி திருமணத் தகவல் மையம்**

எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.
044 - 2485 3333, 9688877700,
E-mail Id : reddymatrimonired@gmail.com |
For Online Registration Website : www.reddymatrimony.co.in
நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
[வார விடுமுறை கிடையாது]

# ஆவணி மாதம் முள்ளங்கி சாகுபடிக்கு ஏற்றது

**விவசாயப் பகுதி**



ஆவணி மாதத்தில் அதிகம் விளைச்சல் தரும் காய்கறி. முள்ளங்கி காய்கறி பயிர் அனைத்து தரப்பு மண்வகையிலும் விரைந்து வளரக்கூடிய ஒரு காய்கறி பயிராகும். முள்ளங்கி சாகுபடியில் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம். முள்ளங்கி ஒரு மருத்துவ குணம் நிறைந்த காய்கறியாகும். மஞ்சள் காமாலை நோய்க்கு இது ஒரு சிறந்த மருந்தாகும். ரத்தத்தில் காணப்படும் பில்லுரிபின் அளவை குறைத்து மஞ்சள் காமாலை நோயை கட்டுப்படுத்தும்.

முள்ளங்கி ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் நிலத்தடி காய்கறிகளுள் ஒன்றாகும். இதில் பல்வேறு வைட்டமின்களும், தாதுக்களும் நிறைந்துள்ளன. முள்ளங்கி பல்வேறு வயிறு தொடர்பான சிக்கல்களுக்கும், குடல் நோய்களுக்கு சிகிச்சையளிக்க உதவுகிறது. இது பசியின்மை, காய்ச்சல் மற்றும் தொண்டை வீக்கம் போன்ற பிரச்சினைகளை குணப்படுத்துகிறது. முள்ளங்கியில் பல்வேறு வகையான மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளது. முள்ளங்கியின் இலைகள் மற்றும் விதைகளும் உடலுக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

முள்ளங்கியின் இலை பொரியலாக செய்து உணவு பண்டங்கள் தயாரிக்கலாம். முள்ளங்கியில் நார்சத்து அதிகமாக உள்ளதால், மல இளக்கியாகவும் பயன்படுகிறது. முக்கியமாக மூலநோய் பாதிக்கப்பட்ட நபருக்கு முள்ளங்கி சிறந்த மருந்தாகவும், மூலநோயின் தாக்குதலை கட்டுப்படுத்தி மலச்சிக்கலை போக்கி நல்ல நிவாரணம் தருகிறது. மனித உடலில் கேன்சர் போன்ற நோய்கள் தாக்காத வண்ணம் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி இந்நோயின் தாக்குதலை குறைக்கிறது.

## காலநிலை

முள்ளங்கி, வெப்பம் மற்றும் மித வெப்பம் பகுதிகளில் நன்கு வளரும். இது வேகமாக வளரக் கூடிய ஒரு பயிராகும். சுமார் 60 முதல் 70 நாட்களில் அறுவடைக்கு வரும். அதிகமாக பூச்சி நோய்கள் தாக்குதல் காணப்படுவதில்லை. எனவே இதன் மகசூல் அதிக லாபம் தரும்.

முள்ளங்கியில் நீண்ட முக்கோண வடிவம் கொண்ட வகையும், உருண்டை வடிவில் கிழங்குகள் உருவாகும் வகையிலும் உள்ளது. 30 செ.மீ. வரை நீளம் கொண்டதாகும். பியுசா டேசாய், பியுசா ரஸ்மி, பியுசா கியுமின், கலியானி வெள்ளை போன்ற முள்ளங்கியின் ரகங்கள் அதிக மகசூல் தரும். காலநிலை வெப்பம் 10 முதல் 30 சென்டி கிரேடு வரை வளரக்கூடியது.

## மண்வகை

முள்ளங்கி பயிரிட நல்ல வடிகால் உள்ள இளகிய மண் மிகவும் சிறந்தது. 6 முதல் 8 இன்ச் வரை இளகிய மண் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அடியுரமாக பண்ணைக் கழிவு உரம், தொழு உரம் இடவேண்டும்.

மண்ணை பூஞ்சான் தாக்குதலில் இருந்து பாதுகாக்க தூய்மைப்படுத்தவேண்டும். பயிர் செய்யப்படும் நிலத்தை, ஒளி ஊடுருவி செல்லும் பாலித்தீன் தாள் மூடி வைப்பதால், சூரிய வெளிச் சத்தில் இருந்து கிடைக்கும் வெப்பம் மண்ணில் ஈர்க்கப்பட்டு வெளியில் செல்லாமல் வெப்பம் அதிகம் ஆவதால் பூஞ்சான் விதைகள் அழிக்கப்பட்டு முள்ளங்கி பயிரை நோய்கள் தாக்காமல் பாதுகாக்கப்படும்.

## நாற்றுகள் தயாரித்தல்

முள்ளங்கி வளர மேட்டு பாத்தி அமைத்து விதைகளை ஒரு பங்குக்கு 4 பங்கு மணல் என்ற அளவில் சரியாக தூவி நாற்றுகளை செழிப்பாக உருவாக்கலாம். 10 முதல் 12 கிலோ வித்துகளை ஒரு ஹெக்டர் சாகுபடி செய்ய பயன்படுத்த வேண்டும். விதைகளை நாப்பதாலின் அசிடிக் அமிலத்தை 10-20 பி.பி.எம். என்ற அளவில் கலந்து அதில் முள்ளங்கி விதைகளை தேர்வு செய்து நடவு செய்யவேண்டும்.

மேட்டு திண்டு பாத்திகளை வரிசையாக அமைத்து மேட்டு திண்டு பாத்திகளில் கன்று களை நடவு செய்ய வேண்டும். செடிக்கு செடி 10 செ.மீ. அளவிலும், வரிசைக்கு வரிசை 30 செ.மீ. அளவிலும் நடவு செய்ய வேண்டும்.

### நீர்பாசனம் – உரமிடும் முறை

முள்ளங்கி நட்டு நான்கு தினங்களுக்கு தினமும் நீர்பாசனம் செய்ய வேண்டும். பின்பு 3 அல்லது 4 நாட்கள் இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

தொழு உரம் எக்டேருக்கு 25 முதல் 40 டன் வரை இட வேண்டும். தழை உரம் 18 முதல் 50 கிலோ வரை, அம்மோனியம் சல்பைட் உர வடிவில் இட வேண்டும். 50 கிலோ பொட்டாஷ் சத்து, முரியட் ஆப் பொட்டாஷ் வடிவில் இட வேண்டும். தழைசத்து உரத்தை பாதி பங்கினை அடியுரமாகவும், பின்பு 30 நாட்கள் கழித்து அரை பங்கு உரத்தை மேலுரமாகவும் இடவேண்டும்.

களைகளை கட்டுப்படுத்த நைட்டோபென் 25 சதம் மருந்துகளை தெளித்து களை விதைகளை முளைக்காமல் தடுக்கலாம். வேகமாக வளரக் கூடிய முள்ளங்கி, வேகமாக வளர்ந்து கிழங்குகள் மண்ணின் மேல்பாகத்தில் தடித்து வளரும். தேவைக்கேற்ப இளம் முள்ளங்கிகளை அறுவடை செய்யலாம்.

முக்கியமாக முள்ளங்கி பயிர்களை இலை புழுக்கள் தாக்கக்கூடும். இதனை கட்டுப்படுத்த வேப்பம்கொட்டைசாறு தெளித்து கட்டுப் படுத்தலாம். முள்ளங்கியினை வெட்டிப் பார்க்கும் பொழுது அதன் மத்தியப் பகுதியானது பஞ்சு போன்று காணப்படும். சரியான இந்த ஆவணி பட்டத்தில் அறுவடை செய்து அதிக லாபம் ஈட்டலாம்.

# மனப்பதற்றத்தை தவிர்ப்பது எப்படி?

**சிறப்பு கட்டுரை**



இக்காலத்தில் மனப்பதற்றம் என்பது அனைவரின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு சூழ்நிலையில் ஏதோ ஒரு அளவில் வந்து செல்கின்ற ஒன்றாகி விட்டது. எனவே மனப்பதற்றத்தை எப்படி எதிர் கொள்வது? என்பதை அனைவரும் அறிந்து கொள்வது நன்று. அப்போதுதான் வாழ்வியல் முறை மாற்றங்களினால் ஏற்படும் நோய்களில் இருந்து விலகி நின்று அமைதியாக நம் ஆயுட்காலத்தை நீட்டிக்கலாம்.

இரவு உறங்காமல் சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவிடுவதுதான் மனப்பதற்றத்திற்கு முதற்காரணமாக உள்ளது. பொறுப்புகளைச் செய்ய வேண்டும், இந்த வேலையைக் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடிக்கவேண்டும், என்று வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக்கும் பெரியவர்களை மட்டுமே துன்புறுத்தும் இந்த மனப்பதற்றம், தற்போது குழந்தைகளையும் தொற்றிக் கொண்டுவிட்டது. இது காலத்தின் கோலமா? இதற்குத் தீர்வுதான் என்ன? என்பது பற்றி இப்பகுதியில் பார்க்கலாம்.

### மனப்பதற்றத்தின் அறிகுறிகள்

1. படபடப்பு,
2. பய உணர்வு,
3. எதைப்பற்றியும் சிந்திக்க முடியாமல் இருத்தல்,
4. வியர்த்துக் கொட்டுதல்,
5. கை மற்றும் உடல் நடுக்கம்,
6. உடல் சில்லிட்டுப் போதல்,
7. வார்த்தைகளில் தடுமாற்றம்,
8. கண்கள் மறைப்பது போன்ற உணர்வு,
9. பேச நினைத்ததை மறந்து விடுவது,
10. செய்யும் வேலைகளைத் திறம்பட செய்ய முடியாமல் போவது.

### மனப்பதற்றத்திற்கான சிகிச்சை முறைகள்

இதைக் கண்டு பிடிப்பதற்கென்று சிறப்பான ஆய்வுகள் ஏதுமில்லை. நீங்கள் கூறும் தொந்தரவுகளை வைத்தே இதைக் கண்டுபிடித்து விடலாம்.

ஆலோசனைகள், பதற்றத்தை விரட்டுவதற்கான சில மாத்திரைகள், உறக்கத்தை வரவைப்பதற்கான மாத்திரைகள் என்று அவரவர் மனப்பதற்றத்திற்கு ஏற்றவாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் இந்த மனப்பதற்றத்தை அகற்றச் செய்ய வேண்டிய செயல் திட்டங்கள் பற்றி இங்கே பார்க்கலாம்.

### மனப்பதற்றத்தை அகற்றும் செயல் திட்டங்கள்

எடுத்துக்காட்டுக்கு உங்களுக்காக 6 விதைகளை உருவாக்கியிருக்கிறோம். இதைக் காலை எழுந்தவுடனும், இரவு உறங்குவதற்கு முன்னும் குறைந்தது 3 முறைகளாவது மனத்திற்குள் சொல்ல வேண்டும்.

- முதலில் நேர்மறை எண்ணங்களை உருவாக்குவோம். நான் மன அமைதியுடன் இருக்கிறேன், என் ஒவ்வோர் அணுவிலும் அமைதியானது வாசம் செய்கிறது. நான் தைரியசாலி. தைரியத்துடனும், உறுதியுடனும் இருக்கிறேன். நான் மனமகிழ்ச்சியுடன் இருக்கிறேன், நான் உடல்நலத்துடன் இருக்கிறேன். என் ஒவ்வோர் அணுவும் திறம்பட தன் பணிகளைச் செய்கிறது. நான் என்னை நேசிக்கிறேன். இம்மனப்பயிற்சியை நான் எனக்கே பரிசளிக்கிறேன். நான் இயற்கையை நேசிக்கிறேன். இயற்கையோடு இணைந்து வாழ்கிறேன்.

இவற்றை இரு வேளைகள் சொல்வதோடு மட்டும் நிறுத்திவிடாமல், எப்போதெல்லாம் மனப்பதற்றம் தோன்றுகிறதோ, அப்போதெல்லாம் இந்த 6 விதைகளை மீண்டும் மீண்டும் சொல்லி மனத்திற்குள் ஊன்ற வேண்டும். உங்களுக்கு ஏற்ற வாறு விதைகளை நீங்களே உருவாக்கியும் கொள்ளலாம்.

- தினமும் ஒரு மணிநேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி செய்வது மனப்பதற்றத்தைக் குறைக்கும்.
- அன்றன்று சமைத்த உணவுகளை மட்டுமே உட்கொள்ள வேண்டும். பதப்படுத்தப்பட்ட மற்றும் துரித உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- இரவு 7 மணி நேரமாவது ஆழ்ந்த உறக்கம் கொள்ள வேண்டும்.
- உறங்குவதற்கு 2 மணிநேரத்திற்கு முன்பு அலைபேசி, தொலைக்காட்சி, கணினி மற்றும் மடிக்கணினி போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- எந்த வேலை செய்தாலும் அதில் மட்டுமே முழுக் கவனத்தையும் செலுத்தி வேலை செய்ய முயல வேண்டும்.
- நீங்கள் கவலையாகவோ, மன அழுத்தமாகவோ, மனச்சோர்வடைந்தவராக அல்லது தனிமையாகவோ உணர்ந்தால், செல்ல பிராணிகளோடு நேரத்தைச் செலவிட வேண்டும்.
- பதற்றத்தை உருவாக்கும் உணர்ச்சிகளை எதிர்கொள்ள, நலமான வழிகளை உருவாக்க முயன்றிட வேண்டும்.
- நலமற்ற சிந்தனைகளைக் கண்டறிந்து மாற்ற முயல வேண்டும்.
- மது மற்றும் புகைபழக்கம், போதைப்பொருட்களுக்கு அடிமையாவது போன்ற கெட்ட பழக்கங்கள் இருந்தால் அவற்றைக் கைவிட வேண்டும்.
- அவ்வப்போது மகிழ்ச்சியான உங்கள் வாழ்க்கையின் பக்கங்களைத் திருப்பிப் பார்க்க வேண்டும்.

- உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ள வேண்டும் மற்றும் உங்கள் நோக்கங்களில் எப்போதும் விழிப்புடனேயே இருக்க வேண்டும்.
- கடந்த காலம் ஒரு அனுபவம், எதிர்காலம் ஒரு கனவு, நிகழ்காலம் மட்டுமே உண்மை என்பதை உணர்ந்து, நிகழ்காலத்தில் நாம் செய்ய வேண்டிய வேலைகளைக் கண்ணும் கருத்துமாகச் செய்ய வேண்டும்.

### குழந்தைகளுக்கு ஏற்படும் மனப்பதற்றம்

25 ஆண்டு கால மருத்துவச் சேவையில் குழந்தைகள் மனப்பதற்றத்துடன் வருவதைக் கொரோனாக் காலகட்டத்திலிருந்து பார்க்க நேரிடுகிறது. இதற்கு முதற்காரணம் இரவில் சரியாக உறங்காமல் இருப்பதும், காணொலி விளையாட்டில் அதிக ஆர்வம் கொள்வதும் மற்றும் அலைபேசியில் அதிகநேரம் செலவிடுவதும் தான். இன்னும் பல காரணங்கள் இருந்தாலும் இவையே குழந்தைகளை அதிகமாய்ச் சீர்குலைக்கின்றன. எனவே குழந்தைகளை ஊடகங்களிலிருந்து விலகி இருக்க நாம் என்ன செய்யலாம்? என்பதை இங்கே காண்போம்.

### குழந்தைகள் அலைபேசி பார்ப்பதைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்?

உங்கள் குழந்தை படிக்காமல் தொடர்ந்து அலைபேசியைப்பார்த்துக்கொண்டே இருந்தாலோ அல்லது தொலைக்காட்சியில் மூழ்கிக் கிடந்தாலோ, உடனே குழந்தையை அடிக்கப் பாயாமல், இங்க பாருடா கண்ணா...! தினமும் ஈவ்னிங் அரை மணிநேரம் அலைபேசி பார்க்க அப்பா, அம்மா உன்னை அனுமதிக்கிறோம். ஆனா அதையும் தாண்டி அப்பா, அம்மா பேச்சைக்கேட்காமல், நீ தொடர்ந்து மொபைல் பாக்குற, டிவி பாக்குற இனிமேல் இப்படிச் செய்தா, இனி நீ வழக்கமா பாக்குற நேரத்தில்கூட அலைபேசி, தொலைக்காட்சி பார்க்க முடியாது. அதனால் கவனமா நடந்துக்கோ என்று உறுதியான குரலில் தெரிவியுங்கள்.

மறுநாள், உங்கள் பேச்சை மதித்து, குழந்தை அலைபேசி பார்க்கும் நேரம் முடிந்ததும் அதை வைத்துவிட்டுப் படிக்கவந்தால் நலம். அப்படி இல்லாமல், முதல் நாள் போலவே அலைபேசியைப்பார்க்க ஆரம்பித்தால், அதற் கடுத்த நாட்களில் உங்கள் குழந்தை முற்றிலும் அலைபேசி பயன்படுத்துவதை அனுமதிக்காதீர்கள்.

இதற்காகக் குழந்தை அழுது அடம்பிடித்தால், அதை அடிக்காதீர்கள். உங்கள் முடிவில் உறுதியாக இருங்கள். தொடர்ந்து இதுபோல் உங்கள் உறுதியைக் காண்பித்தால், குழந்தைகள் இனி அம்மா, அப்பாவ ஏமாற்ற முடியாது என்று முடிவுசெய்து உங்கள் வழிக்கு வருவார்கள்.

ஆனால், ஒரு நாளிலேயே இந்த மாற்றம் குழந்தைகளிடம் வந்துவிடாது. உங்களின் தொடர்ந்த உறுதியும், பொறுமையும் மட்டுமே அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டுவரும். எனவே தொடர்ந்து முயலுங்கள். மனஅமைதியுடனும் மனமகிழ்ச்சியுடனும் வாழ்வோம்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரம் செம்மை யாமே

– அகத்தியர் ஞானக்கோர்வை

# ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

தொலைபேசி : ..........................................................

நான் இத்துடன் .............. வருட சந்தா/15 வருட சந்தா தொகை ரூ.............. டி.டி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**


**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com


**ACCOUNT PAYEE : REDDY ELAINGER PERAVAI**

BANK NAME : **INDIAN BANK**

BRANCH : **JAFFERKHANPET,**

A/C. NO. : **7105534900**

IFSC CODE : **IDIB000J019**

# நலம் தரும் சிறுதானியங்கள்

மருத்துவப் பகுதி



**தினை** : உலகிலேயே அதிகம் பயிரிடப்படும் இரண்டாவது தானியம் இதுதான். தினையில் உலக உற்பத்தியில் சீனா முதல் இடம் வகிக்கிறது. நாம் இரண்டாம் இடம் வகிக்கிறோம். இது தெற்கு ஆசியாவில் சுமார் 10,000 வருடங்களுக்கு மேலாகப் பயிரிடப்பட்டு வருகிறது. தினைக் கதிர்கள் நரி வாலைப் போன்ற தோற்றத்தில் இருப்பதால் இதை ஆங்கிலத்தில் Fox Tale millet என்று சொல்கிறார்கள். இறடி, ஏறல், கங்கு என்ற வேறு பெயர்களும் இதற்கு உள்ளன.

தினையைப் பயிரிட வடிகால் வசதியுள்ள மணல் பாங்கான மண் வளம் தேவை. 70 நாளில் கதிர்பிடித்து 90 நாளில் கதிர் முற்றி அறுவடைக்கு தயாராகி விடும். ஆடி, ஆவணி ஆகிய பட்டங்கள் இதற்கு ஏற்றவை. வைட்டமின் பி ஊட்டச்சத்தும் பாஸ்பரஸ், கால்சியம் போன்ற தாது உப்புக்களும் நிறைந்தது இது எலும்புகளை வலுவாக்கும். குடல் புண், வயிற்றுப்புண்களை குணமாக்கும். செரிமானத்தை மேம்படுத்தும். தினையில் இட்லி, தோசை, பொங்கல், அதிரசம், முறுக்கு ஆகியவை செய்யலாம்.

**சாமை** : சாமை ஒரு புன்செய் நிலப்பயிராகும். இதை பயிர் செய்ய ஆடி, ஆவணிப்பட்டங்கள் ஏற்றவை. இது 80ம் நாளில் கதிர்பிடித்து, 100 அல்லது 110ம் நாளில் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராகி விடும். சாமையில் இரும்புச்சத்து, வைட்டமின் பி, புரதச்சத்து நிறைந்துள்ளது. எலும்புகளுக்கு இடையில் உள்ள தசைகளை வலிமை பெறச் செய்கிறது மலச்சிக்கலை நீக்கி செரிமானத்தை மேம்படுத்தும். இனப்பெருக்க உறுப்புகளை வலுவாக்கும். தாது கெட்டிப்படும். சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்றது. சாமையில் பொங்கல் உப்புமா, பிரியாணி போன்றவை செய்யலாம் சாமை நெல்லரிசி போன்றே பயன்படுத்தப்பட ஏற்றது. கைக்குத்தலாக உமி நீக்க பயன்படுத்தும் போது இதன் நார்ச்சத்துக்கள முழுமையாக நமக்குக் கிடைக்க வாய்ப்புள்ளது.

**வரகு** : வரகின் விதை ஆயிரம் வருடங்கள் வரை முளைப்புத்திறன் கொண்டது என்கிறார்கள் மனிதன் ஆதிகாலம் தொட்டே வரகை பயன்படுத்தி வந்திருக்கிறான். வரகுக்கு ஏழு அடுக்குத்தோல் உண்டு. இந்த தானியத்தை பறவைகளாலும் விலங்குகளாலும் உண்ண முடியாது. வரகை கோயில் கோபுரங்களின் உள்ள கும்பத்தில் போட்டிருப்பார்கள். இதற்கு இடியையும் தாங்கும் வலிமை உள்ளது என்றும் ஒரு நம்பிக்கை உள்ளது. களர் மண்ணில் கூட சிறப்பாக வளரும் பண்புடையது இது ஆடிப்பட்டம் வரகு சாகுபடிக்கு ஏற்றது. இதன் வயது ஐந்து மாதங்கள்.

வரகில் புரதச்சத்து, கால்சியம், வைட்டமின் பி, நுண்ணூட்டச்சத்துக்கள், நார்ச்சத்துகள் நிறைந்துள்ளன. வரகை நன்கு தோல் நீக்கி சுத்தம் செய்யாவிட்டால் தொண்டையில் அடைத்துக் கொண்டு ஒருவித ஒவ்வாமையை ஏற்படுத்தும். கல்லீரலின் செயல்பாடுகளைத் தூண்டும். கண் நரம்புகளுக்கு ஏற்றது. கால்சியம் எலும்புகளுக்கும் பற்களுக்கும் வலிமை. மாதவிடாய் கோளாறு–களை சீராக்கும். நிணநீர் அதிகரிக்கும். செரிமான மண்டலத்தை வலுவாக்கும். வரகில் இட்லி, தோசை போன்றவை செய்து சாப்பிடலாம்.

**கேழ்வரகு** : ஆரியம், ராகி, கேப்பை, குரக்கன் என்ற வேறு பெயர்களும் இதற்கு உள்ளன. தமிழகம் ராகி சாகுபடியில் முதலிடத்தில் இருக்கும் மாநிலம். ஆப்பிரிக்காவில் இருந்து சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இது இங்கு வந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இது ஆண்டுக்கு ஒருமுறை விளையும் பயிராகும். வெப்ப மண்டல, மித வெப்ப மண்டல பயிர் என்பதால் மலைச்சரிவுகளிலும் சமவெளிகளிலும் பயிரிடலாம். ராகிக்கு அதிக மழை நல்லதல்ல. கதிர் முதிரும்போது மழை இருக்கக்கூடாது. வண்டல் மண் இதற்குச் சிறந்தது. சிறிதளவு நீர் வாய்ப்பையும் பயன்படுத்தி வளரும்.

இதில் உள்ள டிரிப்டோபேன் எனும் அமினோ அமிலம் பசிக்கும் உணர்வை நெடுநேரம் தக்க வைத்திருக்கும். செரிமானத்தை மேம்படுத்தும். கால்சியம் நிறைந்திருப்பதால் எலும்புகள் வலுப்படும். இதன் பைட்டோகெமிக்கல்கள் சர்க்கரை நோயைக்கட்டுப்படுத்த வல்லவை. லெசித்தின் மற்றும் மெத்தியோனைன் போன்ற அமினோ அமிலங்கள் கல்லீரலில் உள்ள தேவையற்ற கொழுப்பை அகற்ற உதவுகின்றன. எனவே, உடல்பருமன் உள்ளவர்கள் சாப்பிடலாம். பால் சுரப்பை மேம்படுத்தும். ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தும். கேப்பையில் தோசை வார்த்துச் சாப்பிடலாம்.

**பனிவரகு** : பனிவரகு ஒரு புன்செய் தானியம். சிறுதானியங்களில் குறைந்தகாலத்தில் விளைவது இதுதான். குளிர் காலங்களில் அதிகாலையில் பொழியும் பனியின் ஈரப்பதமே இதற்குப் போதும். அதனால்தான் இதற்கு பனிவரகு என்ற பெயர். சராசரியாக 65வது நாளில் கதிர் அறுவடைக்குத் தயாராகிவிடும். மார்கழியில் விதைத்து தை முடிந்ததும் அறுவடை செய்துவிடலாம்.

நார்ச்சத்து, புரதச்சத்து, இரும்புச்சத்து, கால்சியம் நிறைந்தது. கால்சியம் எலும்புகளை வலுவாக்கும். நார்ச்சத்து செரிமானத்தை மேம்படுத்தும். எலும்பு, மூட்டுகளுக்கு நல்லது. பனிவரகில் இட்லி, தோசை, குழிப்பணியாரம் செய்து சாப்பிடலாம்.

**கம்பு** : கம்பு எல்லா மண்ணிலும் விளையும் தாவரம். இதன் அறுவடைக்காலம் மூன்று அல்லது நான்கு மாதங்கள். ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட நாடுகளில் கம்பு பிரதானமான உணவுப்

பொருளாக உள்ளது. குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் முக்கிய உணவாக கம்பு உள்ளது. உலகின் மொத்த சிறுதானிய உற்பத்தியில் கம்பு தான் 55 சதவீதம் என்கிறார்கள்.

கம்பில் கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் பி 11, ரிபோஃப்ளேவின், நியாசின் உள்ளிட்ட நுண்ணூட்டச்சத்துகள் உள்ளன. கால்சியம் எலும்புகளை வலுவாக்குகிறது. இரும்புச்சத்து ரத்தசோகையைப் போக்குகிறது. உடல் எடையை குறைக்கிறது. உடல் உஷ்ணத்தைக் குறைக்கிறது. மலச்சிக்கலை நீக்கி வயிற்றுப்புண்ணை குணமாக்குகிறது. வேறு எந்த சிறுதானியத்திலும் இல்லாத அளவுக்கு கம்பில் ஐந்து சதவீதத்துக்கு மேல் எண்ணெய் உள்ளது.

இந்த எண்ணெயில் பாலிசாச்சுரேட்டட் ஃபேட் எனப்படும் நிறைவுறா கொழுப்பு உள்ளது. இது இதயத்துக்கு ஏற்றது. தேவையற்ற கொழுப்பை அகற்றி நல்ல கொழுப்பை உடலில் சேர்க்கும். கம்பில் தோசை, பணியாரம், இட்லி செய்து சாப்பிடலாம்.

**குதிரைவாலி :** இது ஒரு புன்செய் பயிர். இதை 90 நாட்களில் மானாவரியாகப்பயிரிட்டு அறுவடை செய்யலாம். இதை புல்லுசாமை என்றும் சொல்வார்கள். குதிரையின் வால் போன்று இதன் கதிர் காணப்படுவதால் குதிரைவாலி என்ற பெயர் வந்தது. இதில் கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் பி போன்றவை உள்ளன. கால்சியம் எலும்புகளை வலுவாக்கும். மூட்டுவலியைப் போக்கும். குதிரைவாலியில் வெண்பொங்கல், பிரியாணி, உப்புமா போன்றவை செய்து சாப்பிடலாம். நெல் அரிசியைப்போன்றே குதிரைவாலி சாதத்திலும் கார்போஹைட்ரேட் நிறைவாக உள்ளதால் உடனடியாக எனர்ஜி கிடைக்கும்.

**சோளம் :** ஆண்டுக்கு ஒருமுறை சாகுபடி செய்யும் பயிர் இது. ஆடிப்பட்டத்தில் விதைக்கலாம். அமெரிக்காவில் சோளம் மிக முக்கியமான உணவுப்பொருள். சோளத்தில் உடலுக்கு அவசியமான இரும்புச்சத்து, புரதச் சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்புச்சத்து ஆகிய அனைத்துமே நிறைந்துள்ளன. இதில் உள்ள நல்ல கொழுப்பு உடலின் தேவையற்ற எடையைக் குறைக்க உதவும். கரோட்டின் கண்களுக்கும் நரம்புகளுக்கும் நல்லது. தயமின், ரிபோஃப்ளோவின், நியாசின் ஆகிய நுண்ணுட்டச் சத்துக்களும் நிறைந்துள்ளன. சோளத்தில் தோசை, அடை, வடை, வெண் பொங்கல் என விதவிதமாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

சிறுதானியங்களை தினசரி ஒருவேளையாவது உணவில் சேர்த்துக்கொள்ளும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் வாரம் இரு நாட்கள் எனத்தொடங்கலாம். சிறு தானியங்கள் என்றால் எப்போதும் களியோ, கூழோ தான் செய்ய வேண்டும் என்று இல்லை. இன்று சிறுதானியங்களிலேயே இட்லி, தோசை, ஆப்பம், இடியாப்பம், ஊத்தாப்பம்,



கொழுக்கட்டை, பிரியாணி, பொங்கல், வடை என விதவிதமாகச் செய்யும் பழக்கம் மெல்ல அதிகரித்து வருகிறது.

குழந்தைகளுக்கு இப்படியான விதவிதமான டிஷ்களை செய்து கொடுத்து அசத்தலாம். இதனால் சிறுதானிய ருசி மெல்ல அவர்களுக்குப் பழகும். முளைகட்டி, பால் எடுத்து, நார்ச்சத்தைக் குறைத்து, மால்ட் எனும் விதமாக சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். இது மிகவும் சத்துமிக்க உணவு. வளரும் குழந்தைகளுக்கு ஏற்ற எல்லா சத்துகளும் இதில் நிறைந்துள்ளதால் ரத்தசோகை உட்பட ஊட்டச்சத்து குறைபாடால் உள்ள பல்வேறு பிரச்சனைகள் நீங்கும்.

சிறுதானியங்களை அளவாக வாங்கிப் பயன் படுத்துவது நல்லது. இயற்கையான முறையில் விளைந்தவை என்பதால் மொத்தமாக வாங்கும் போது பூச்சி பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. குறிப்பிட்ட இடைவெளியில் வெயிலில் உலர வைத்துப் பயன்படுத்துவதும் சிறந்த முறையே.

## மூத்தோர் பொன் மொழிகள்

1. மற்றவர்களின் தவறுகளை பார்க்க வேண்டாம்.
2. உங்கள் நண்பர்கள் பற்றி புறம் பேச வேண்டாம்.
3. உங்கள் நண்பர்களை விரோதம் கொள்ள வேண்டாம்.
4. உங்கள் நண்பர்கள் பற்றி சந்தேகம் வேண்டாம்.
5. மற்றவர்கள் புரிந்துகொள்ளும்படி தெளிவாக பேசுங்கள்.
6. தனியாக பயணம் செய்ய வேண்டாம் .
7. உங்கள் சொந்த முடிவு ஆயினும் மற்றவர்களிடம் ஆலோசனை கேளுங்கள்.
8. உங்களைப் பற்றி பெருமை கொள்ளக்கூடாது.
9. வறுமையின் போது பொறுமை காக்கவும்.
10. நல்ல விஷயத்திற்காக உதவி செய்யுங்கள்.
11. செய்த தவறுகளை நினைத்து வருந்துங்கள்.
12. உங்களுக்கு கெட்டது செய்தவர்களுக்கு நல்லது செய்யுங்கள்.
13. இருப்பதைக் கொண்டு திருப்தி அடையுங்கள்.
14. அதிகம் தூங்கக்கூடாது, அது மறதியை ஏற்படுத்தும்.
15. ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு முறையாவது இறைவனை நினைவு கூறுங்கள்.

# தானமும் தவமும்

**ஆன்மீகப் பகுதி**



'வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியவேண்டாம்' என்றொரு சொல்வழக்கு உண்டு. மழையினைப் பற்றிக் கூறும் போது,

**தானமும் தவமும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்.. (019)**

என்று சிறப்பித்தருள்கின்றார் வள்ளுவர். வானம் பொழியாவிட்டால் தொலைந்து போகக் கூடிய பெருஞ்சிறப்பினை உடையவை தானமும் தவமும். அதனால் தான்

**தானமும் தவமும் தான் செய்வாராயின்**
**வானவர் நாடு வழி பிறந்திடுமே** என்றார் ஔவையார்.

தானம் என்பது பிறர் பொருட்டு. தவம் என்பது தம் பொருட்டு. வானவர் நாட்டின் வழிக்கதவுகள் இரண்டு. தானத்தினால் ஒரு கதவும் தவத்தினால் மற்றொரு கதவும் திறக்கும் என்று விரிவுரை வழங்குவார் அருள் மொழியரசு வாரியார் சுவாமிகள்.

"தானமும் தவமும் தான் செய்வது அரிது" என்று ஔவை மூதாட்டி சொல்லி கேட்டிருக் கிறோம். தானமும் தவமும் பற்றி சரியாக புரிதல் நமக்கு இருக்கிறதா என்றால், பலருக்கும் அது இல்லை. தானம் தவம் இரண்டையும் ஒரே கண்ணோட்டத்தில் வைத்து அதன் மீது சிறு விளக்கம் தருகிறார் ஔவையார்.

சாத்வீகம், ரஜோ, தமோ என்ற மூன்று விதமான குணங்களைக் கொண்டு தானம், தவம் பற்றி கீதை விளக்கம் தருகிறது. தவம் என்றால் என்ன? சாத்வீக குணத்தின் தவம் எப்படி இருக்கும். குரு, தெய்வம், சான்றோர் இவர்களிடம் செய்யும் பூரண பக்தி கூட தவம் தான். தூய்மையாக இருத்தல், நல்ல சிந்தனை, பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிப்பது எல்லாம் தவம் தான். மேல் சொன்ன அனைத்தும் உடல் சார்ந்த தவத்தை சேரும். அப்படி என்றால் வேறு எந்த விதமான தவங்கள் உள்ளது? உடல் சார்ந்த தவம், மனம் சார்ந்த தவம், சொல் சார்ந்த தவம்.

சொல் சார்ந்த தவம், எப்படி? பணிவு, உண்மை, நெறியோடு பேசக்கற்றுக் கொண்டால் அதுவே சொல் சார்ந்த தவம். இது மட்டும் அல்ல, நல்ல புத்தகங்களை வாசிப்பதும், இறைநாமம் சொல்வதும் சொல் சார்ந்த தவத்துக்குள் அடங்கும்.

சரி, மனம் சார்ந்த தவம்? எப்போதும் இறை சிந்தனையோடு இருப்பது, மன நிறைவோடு இருப்பது, புலன் அடக்கத்தோடு இருப்பது, சிந்தனையை தூய்மை செய்வது எல்லாம் மனம் சார்ந்த தவம். எப்போது ஒரு மனிதன் உடல், சொல், மனம் சார்ந்த தவங்களை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்கிறானோ, அங்கே அவன் சாத்வீக குணம் உள்ளவன் ஆகிறான். பூரண சாத்வீக குணம் உள்ளவனுக்கு எந்த எதிர்பார்ப்பும் இருக்காது.

ஒருவேளை நீங்கள் செய்யும் செயல்களில் ஏதேனும் எதிர்பார்ப்பு இருந்தால்? பணமோ, புகழோ, பெயரோ எது வேண்டுமானாலும் சரி, நீங்கள் ரஜோ குணத்தில் உள்ளவர்கள் என்று புரிந்துக் கொள்ளுங்கள்.

இதற்கும் கீழாக ஒரு குணம் உள்ளது. பிறரை துன்புறுத்தும் நோக்கத்தில் செய்யும் எல்லாம் தமோ குணத்தின் அடையலாம். உதாரணமாக, பிறரை நோகச்செய்யும் வகையில் செய்யும் மாந்திரீகம் தமோ குணத்தின்பால் சேரும். இவை மனிதன் புத்தி இழந்து செய்யும் செயல்கள்.

சாத்வீக தவத்தில் இருக்கும் மனிதர்களைப் பார்ப்பது மிகவும் பெரிய விஷயமாகி விட்டது. இன்றைய காலத்தில் வெகு சிலரே சாத்வீக குணத்தின்பால் உள்ளனர். முக்கியமாக ஒன்றை புரிந்துக் கொள்ளுங்கள். சாத்வீக குணத்தை நீங்கள் ஒருபோதும் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. சாத்வீக தவங்களை விலை கொடுத்து கற்று விடலாம் என்று நினைத்தால், அதை விட முட்டாள்தனம் வேறு இல்லை. சாதனா என்பது தனித்துவம் ஆனது. மனிதன் தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ளவும், நெறிப்படுத்திக் கொள்ளவும் செய்யும் பயிற்சி சாதனா. எதை எல்லாம் பணம் கொடுத்து கற்றுக் கொள்ளும் கட்டாயத்திற்குள் இன்று நாம் உள்ளோம். அப்படி பணம் கொடுத்து வாங்கி விட முடியுமா?. அப்படி வாங்கி விட முடியும் என்று நாம் நம்பியதால் தான் இன்று சொகுசு பங்களா போல் காட்சி அளிக்கும் ஆன்மீக மற்றும் யோகா மையங்கள் பெருகி விட்டது. பண்டைய காலங்களில் இதுபோன்று எதுவும் இல்லை. இதுபோன்ற இடங்களில் இருந்து நீங்கள் ஒரு போதும் சாத்வீகத்தை கற்றுக் கொள்ள போவதும் இல்லை.

தவத்தைப் போல் தானமும் உயர்வானது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யும் தானமே சாத்வீகமான தானம். வலக்கைக் கொடுப்பதை இடக்கைக்குக் கூட தெரியக்கூடாது. மீண்டும் சொல்கிறேன் நீங்கள் எதையாவது எதிர்ப்பார்த்து தானம் செய்தால், நீங்கள் ரஜோ குணம் சார்ந்தவர்கள். எந்த தானமும் செய்யாது இருப்பவன் தமோ. ஆன்மீகத்தேடலில் இருப்பவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். ஆன்மீகத்தோடு தானம் சேவை சேர்த்து செய்தால் நீங்கள் எளிதில் முன்னே செல்லலாம். பசிப்பவருக்கு உணவு கொடுங்கள். தெருவில் சுற் றும் விலங்குகளுக்கு உதவுங்கள். வனவிலங்கு களுக்கு எந்த இடர்பாடும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கல்விக்கு உதவி செய்யுங்கள். இந்த கடமைகளை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்து பழகுங்கள். அதை விடுத்து, தற்காலிகமான பணம், புகழ், பெருமைக்கு செய்யும் தானமும் தவமும் தற்காலிக பலனையே தரும்.

உலக மக்கள் அனைவரும் மகிழ்வான வாழ்க்கையையே விரும்புகின்றனர். அவ்வாறு விளைவதே உலக இயல்பு. உலக மக்கள் அனை– வரும் தம் வாழ்க்கையில் நல் ஒழுக்கங்களை கொண்டு ஒழுகினால் உலகம் அனைத்துமே மகிழ்வாக வாழும் பேற்றினை பெறும்.

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 Years of Academic Excellence 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY



NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent
- Institution's Innovation Council 4 STAR RATING
- nirf Rank - 169
- DST - FIST Sponsored
- NAAC Accredited with Grade A
- K.R. Innovation Centre
- NBA Accredited*
- NewGen IEDC, DST, New Delhi

FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, Tessolve, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite Constructions, embedUR, vuram, Hexaware, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 Years of Academic Excellence 2022 - 2023

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net

COURSES OFFERED

UG
B.A. - English B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7438 | 28.06.1996 | B.E. | விசாகம் | —— | —— |
| 2 | G 7439 | 28.06.2000 | B.Sc. B.Ed. | பரணி | IT Company | Rs.25,000/- PM |
| 3 | G 7440 | 09.04.2000 | B.E. | மிருகசீரிஷம் | —— | —— |
| 4 | G 7441 | 11.03.1998 | M.D | மகம் | —— | Rs.1 Lakh / PM |
| 5 | G 7442 | 08.11.1996 | B.E. M.Tech. | அஸ்தம் | Amazon | —— |
| 6 | G 7443 (Widow) | 30.08.1996 | B.E. | உத்திரட்டாதி | Computer Engineer | Rs.8 Lakhs / PA |
| 7 | G 7444 | 20.08.1988 | B.E. MS | அனுஷம் | USA | Rs.1 Crore / PA |
| 8 | G 7445 | 10.01.1999 | MBBS | சித்திரை | Doctor | Rs.50,000/- PM |
| 9 | RM 4770 | 27.02.1998 | B.Tech. | பூரட்டாதி | Software Engineer | Rs.12.5 Lakhs / PA |
| 10 | RM 4966 (Divorcee) | 28.08.1994 | M.Sc. B.Tech. | கிருத்திகை | Software Developer | 55,000 Euro / PA |
| 11 | RM 5414 | 04.06.1998 | MBBS, MD | அஸ்தம் | Doctor | —— |
| 12 | RM 5580 | 17.08.1996 | B.Tech. | உத்திரம் | Consultant | Rs.12 Lakhs / PA |
| 13 | RM 5606 | 26.03.1998 | B.Com. | பூரட்டாதி | Senior Accountant | —— |
| 14 | RM 5810 | 03.08.2001 | B.Sc. MBA | உத்திராடம் | —— | —— |

## தித்திக்கும் பழமொழிகள்

- அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.
- கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக்காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.
- நம்முடன் வாழ்வோரைப் புரிந்துகொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
- நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
- சலித்துக்கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.
- மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லா விட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.
- உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக் கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப் படுகிறது.
- சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச்செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 11213 | 08.06.1997 | B.E. | புனர்பூசம் | Database Programmer | Rs.80,000/- PM |
| 2 | B 11214 | 25.01.1997 | B.Sc.MCA | ஆயில்யம் | Software Developer | Rs.7.2 Lakhs / PA |
| 3 | B 11215 | 09.12.1996 | B.E. | அனுஷம் | Building Construction | Rs.45,000/- PM |
| 4 | B 11216 | 21.06.1985 | B.E. | பூசம் | Auditor | Rs.80,000/- PM |
| 5 | B 11217 | 10.01.1993 | B.E. MS | ஆயில்யம் | USA | $ 1.20 Lakhs / PA |
| 6 | B 11218 | 16.06.1996 | BA | மிருகசீரிஷம் | Hotel Restaurant | Rs.12-13 Lakhs/PM |
| 7 | B 11219 | 25.08.1999 | B.Com. MBA | திருவோணம் | Deutsche Bank | Rs.60,000/- PM |
| 8 | B 11220 (Divorcee) | 26.09.1993 | MBA | திருவோணம் | Finance Manager | Rs.47,000/- PM |
| 9 | B 11221 | 02.06.1997 | ITI | பரணி | Private Company | Rs,40,000/- PM |
| 10 | B 11222 | 16.07.1997 | B.Com. MBA | அனுஷம் | TVS | Rs.30,000/- PM |
| 11 | B 11223 | 28.05.1996 | B.E. | அஸ்தம் | Technologies Software Developer | Rs.58,000/- PM |
| 12 | B 11224 | 17.05.1996 | B.E. | கிருத்திகை | Canada | Can 70,000 / PA |
| 13 | B 11225 | 13.08.1995 | B.E. | பூரட்டாதி | Private Company | Rs.8 to 9 Lakhs/PA |
| 14 | B 11226 | 01.02.1998 | B.E. | உத்திரட்டாதி | Redington | Rs.75,000/- PM |
| 15 | B 11227 | 14.05.1999 | B.Com MBA | அஸ்வினி | Analyst | Rs.4 Lakhs / PA |
| 16 | B 11228 | 18.07.1991 | B.Tech. | சித்திரை | Private School Admin | Rs.20,000/- PM |
| 17 | B 11229 | 17.10.1994 | B.A. B.Com. | பூரட்டாதி | Govt. Job | Rs.53,000/- PM |
| 18 | B 11230 (Divorcee) | 12.11.1991 | B.E. | உத்திராடம் | Technical Leader | Rs.30 Lakhs / PA |
| 19 | B 11231 | 23.11.1999 | B.Tech. | கிருத்திகை | TCS | Rs.9 Lakhs / PA |
| 20 | B 11232 | 20.01.1998 | B.E. | சித்திரை | Own Business | Rs.1 Lakh / PM |
| 21 | B 11233 | 18.01.1997 | MBBS, MS | கிருத்திகை | Doctor | Rs.52,000/- PM |
| 22 | B 11234 | 09.09.1996 | B.E. M.S.MBA | பூசம் | California | $1,20,000/- PA |
| 23 | B 11235 | 09.03.1997 | PUC | பூரட்டாசி | Govt Job (PC) | Rs.5 Lakhs / PA |

# ஓ.பி.ஆர் அவர்களின் 54வது நினைவு நாள் நிகழ்வுகள்























REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : R.RAJASEKARAN.